Registered in Ceylon as a Newspaper ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 9 ஆம் நாள் துல்ஹஜ் 17 (22-5-62) செவ்வாய்க்கிழமை இதழ் 100




யாழ்ப்பாணம் மாநகரசபை

# கலைக்க வேண்டுமா?

## முன்னாள் மேயர்கள் தெரிவிக்கும் கருத்து

## "உயர்பதவி மாற்றங்களால் நிர்வாகம் ஸ்தம்பிக்காது"

[நமது நிருபர்] —திரு. சாம் சபாபதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

**யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைத்துவிடவேண்டுமென்றும், விசேஷ கமிஷனரிடம் சபை நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும் ஒரு சாரார் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். மற்றொரு சாரார் சபையைக் கலைப்பதோ விசேஷ கமிஷனரிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பதோ ஜனநாயகத்துக்கு மாறானதாகுமென அபிப்பிராயப்படுகின்றனர். மாநகரசபை கலைக்கப்படுமா? விசேஷ கமிஷனரிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்படுமா? அல்லது புதியமேயர் தெரிவு செய்யப்படுவாரா? இவைதான் யாழ்ப்பாண நகரில் இன்று கேட்கப்படும் கேள்விகள்.**

யாழ்ப்பாணத்தின் மேயராகப் பதவிவகித்த ஐவர் இன்றுள்ள நிலைமைபற்றி தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர். மாநகரசபையைக் கலைக்கவேண்டும் என்கின்றனர் நால்வர். ஆனால் விசேஷ கமிஷனரிடம் ஒப்படைக்கக்கூடாதென்கின்றனர் இருவர். சபையைக் கலைத்து விசேஷ கமிஷனரிடம் ஒப்படைத்தாலும் இதைவிடச் சிறந்த நிர்வாகம் ஏற்படாது என்கிறார் திரு. சாம் சபாபதி.

யாழ்ப்பாண எம். பி. யும் முன்னாள் மேயருமான திரு. ஏ. டி. துரையப்பா தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாநகரசபை நிர்வகத்தை நான் கடந்த 15 மாதங்களாக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு வருகின்றேன். மேயர்களை இறக்குவதும் ஏற்றுவதும் தான் இச் சபையின் ஒரே வேலையாக இருக்கிறது. நகரின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு 15 அங்கத்தவர்களும் ஒற்றுமைப்பட்டு உழைக்க இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. இம்முயற்சியில் இன்றைய நிலையில் ஈடுபடுவது அவசியம் இதுவே வரியிறுப்பாளரின் விருப்பமாகவும் இருக்கும்.

ஆனால் இன்றுள்ளதுபோன்ற சூழ்நிலை இன்னமும் நீடிக்குமானல் இப்போதைய சபையைக் கலைத்து வரியிறுப்பாளர்களின் தீர்வுக்கு மீண்டும் ஒருசந்தர்ப்பம் கொடுக்கவேண்டும்.

முன்னாள் மேயரான திரு.பி. காசிப்பிள்ளை தெரிவித்ததாவது:-

மாநகரசதைபைக் கலைத்து விசேஷ கமிஷனரை நியமிப்பது ஜனநாயகத்தின் முலவேரையே தகர்த்தெறிவதாகும். மேயர்களிடையே தன்னலமும் அதிகாரவேட்கையும் இருக்கிறதே தவிர மக்கள் சேவையைக்காணமுடியாமல் இருக்கிறது. இன்றைய சபையிடம் மக்களுக்கு நம்பிக்கையில்லை. புதிய தேர்தல் ஒன்று நடாத்த வேண்டியது அவசியம். முன்னர் இழைத்த பிழைகளிலிருந்து திருந்திக் கொள்வதற்கு மக்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இதன் பின் மீண்டும் இக் குழப்பநிலை நீடிக்குமானல் விசேஷ கமிஷனர் நிர்வாகத்தை ஏற்படுத்தலாம்.

பொதுவாக அங்கத்தவர்கள் தேர்தல்களில் நிற்பது மக்கள் சேவைக்கென்று இல்லாமல் சுயநலத்திற்கும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் என்ற நிலையே மேலெழுந்து நிற்கிறது இதுவே இங்கு தப்பு நிலைமைக்குக் காரணம்.

முன்னாள் மேயர் திரு. எஸ். நவரத்தினம் கூறியதாவது:-

இன்றைய சபையின் ஆரம்பகாலத்தில் பெரும்பான்மைக் குழுவில் மேயர் தெரிவு சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அவர்களாலேயே காப்பாற்றப்படவில்லை ஒப்பந்தத்தில் இல்லாத நாலாவதொருவர் இரண்டாவது மேயாராக வந்து அவரும் அவர்களாலேயே விரைவாக நீக்கப்பட்டுவிட்டார். இனி யாரை மேயராகத் தெரிந்து நடாத்தப் போகிறார்கள்? எவர் எஞ்சி இருக்கிறார்? மேயர் பிரசசினையே பிரதான அம்சமாகக் கொண்ட இன்றைய சபையிடமிருந்து, ஸ்திரமான நிர்வாகமொன்றை ஏற்படுத்தி மக்களுக்குச் சேவை செய்யுமென்று எதிர்பார்க்க முடியாது.

தனிப்பட்ட குரோதங்கள் நகரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. யாழ்ப்பாண நகரின் எம். பி. எவராக இருந்தபோதிலும் அவரின் சேவை நகரின் அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் மாநகர சபைக்கு அவசியம் தேவை. அப்படிக் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தையே நழுவவிட்டு விட்டார்கள். தனிப்பட்ட விவகாரங்கள் தலையெடுப்பதே இதற்குக் காரணம்.

இன்றையசபை எது வித பொதுநன்மையையும் செய்ததாகத் தெரியவில்லை. இச் சபையை உடனடியாகக் கலைக்கவேண்டியது அவசியமே ஆனல் விசேஷ கமிஷனரை நியமிப்பது ஜனநாயக உரிமைகளுக்கு முரணானதாகும். ஆகவே மறுபடியும் மக்கள் தீர்ப்புக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும்.

முன்னாள் மேயரான திரு. சி பொன்னம்பலம் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாநகரசபையை உடனடியாகக் கலைத்து அரசியல் தலையீடுக்கு இடமளியாத வகையில் மாநகர சபையின் நிர்வாகம் சிவில் உயர்தர அதிகாரியான விசேஷ கமிஷனரின் கீழ் கொண்டு வரவேண்டுமென நான் வன்மையாகவும் கண்டிப்பாகவும் கூறுகிறேன். மாநகரசபை ஆணையாளரே விசேஷ கமிஷனராக நியமிக்கப்படின் அரசியல் தலையீட்டுக்கு இடமளிப்பதாக அமையும் திரு. சம். ஏ. சபாபதி 1954 டிசம்பரில் மேயர் பதவியிலிருந்து நீங்கியபின் யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகம் படிப்படியாகச் சீர்கெட்டுக்கொண்டு போகிறது. தேவையற்ற முறையில் சபையில் அதிக ஊழியர்கள் நியமனம் பெற்றிருக்கின்றனர். நகரின் முன்னேற்றத்திற்குச் செலவுசெய்ய சபையிடம் பணம் இல்லை. நகரின் சுகாதார நிலைமையிக்கேவலமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. சட்ட வைத்திய அதிகாரி சுகாதாரப் பரிசோதகர்களின் வேலையைக் கண்காணிப்பதில்லை யென்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் வீட்டுக்கு வீடுசென்று பார்வையிடுவதில்லையென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலைமை காலஞ்சென்ற டாக்டர் துரைராசா, டாக்டர் பி. இராசிங்கம் தற்போதைய சுகாதார உதவி அதிபர்; ஆகியோர் சட்டவைத்திய அதிகாரியாக இருந்தபோது இருந்ததில்லை

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக உரிமைகளையே பறிக்கும் நடவடிக்கை

### ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு செனட்டர் நல்லையா தந்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைக்கும் எந்த முயற்சியும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைச் சட்டவிரோதமாகப் பறிப்பதகும்" என்று செனட்டர் ஜி நல்லையா ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி மகாநாம சமரவீராவுக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் குறிப்பிட்டுள்ளார் அந்தத் தந்தியில் செனட்டர் நல்லையா மேலும் தெரிவித்திருப்பதாவது:

யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட விருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளதைக் யாழ்ப்பாணப் பொது மக்கள் திகிலடைந்துள்ளனர். பல்வேறு பிரிவினரும் இதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். மாநகரசபையைக் கலைப்பது தேவையற்றதும் ஜனநாயகத்துக்கு மாறானதுமாகும். மாநகரசபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் சபையைக் கலைப்பதை ஆட்சேபிக்கின்றனர்.

சபையைக் கலைக்கவேண்டுமென்ற கோரிக்கை அரசியல் நோக்கங்களைக் கொண்டது. திறமையற்ற மேயரைப் பதவியிலிருந்து நீக்கிறதற்காக சபையின பெரும்பான்மை அங்கத்தவர்களைத் தண்டிப்பது இதன் நோக்கம் இதைத் தவிர சபையைக் கலைபபதற்கு வேறு நியாயமான காரணம் எதுவுமில்லை. மாநகர சபையைக் கலைக்கும் எந்த முயற்சியும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை சட்டவிரோதமாகப் பறிப்பதாகுமென்பதால் இந்த யோசனையை நான்பலமாக ஆட்சேபிக்கிறேன்.

#### மந்திரிக்கு கடிதங்கள்

மாநகரசபையைக் கலைக்கும் யோசனையை ஆட்சேபித்து வரியிறுப்பாளர்கள் பலரும் வாக்காளர்கள் பலரும் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு கடிதங்கள் பலவற்றை அனுப்பியுள்ளனர்.

## புதிய மேயர் தெரிவுக்கான விசேஷ கூட்டம்?

### நால்வர் ராஜினமா?

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண நகரின் புதிய மேயர் தெரிவுக்கான மாநகர சபையின் விசேஷ கூட்டம் திங்கட்கிழமை மாலை 3-30மணிக்கு நடைபெறும். ஆனல் இந்த விசேஷ கூட்டத்திற்கு முன்பே மாநகரசபை கலைக்கப்படலாமென்ற வதந்தி மாநகரசபை வட்டாரங்களில் பலமாக அடிபடுகிறது இதே நேரத்தில் கலைக்கும் முயற்சிக்கு எதிர்நடவடிக்கைகளும் பலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இதற்கிடையில் 4 அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை மிகவிரைவில் ராஜினமாச்செய்யவிருக்கிறார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசேஷ கூட்டம் நடைபெறும் பட்சத்தில் இறுதிநேரத்தலாவது மேயர் தெரிவில் ஓர் சமரசத்தை ஏற்படுத்த பலர் முயற்சியெடுத்து வருகிறார்கள்.

அண்மையில் மேயர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த அத்தனை மாநகரசபைஅங்கத்தவர்களும் புதிய மேயர் தெரிவில் ஒருமுகப்பட்டிருக்க மாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இதே நேரத்தில் இவர்களை ஒருமுகப்படுத்தும் வகையில் பொதுவான ஒருவரை மேயர்பதவிக்குத் தெரிவு செய்வதுபற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இந்தவகையில் காதி எம். சுல்த்தானின் பெயர் பலமாக அடிபடுகிறது.

# இன்று உங்கள் பலன்

–சோதிடஆசான்செ.தெல்லியூர்

சுபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 9ம் நாள் செவ்வாய்க் கிழமை (22-5-62)ஹிஜ்ரிஆண்டு 1381,துல்ஹஜ்மாதம்17ம்பிறை. இன்று இரவு 7-32 வரை திருதியை. பின் சதுர்த்தி. மாலை6-49 வரை மூலம். அதன்பின்னர் பூராடம், அமிர்த சித்தயோகம். திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை, திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை, முருகர் குருபூசை, திருநீலக்கர் குருபூசை. இராகுகாலம்- 2-52முதல் 4-22 வரை.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

## இராசிப்பலன்

மூலம்-பூராடம்: அனுவசிய கவலை, செய்காரியத்தடை, பிரயாணம், தொழில்நலம்.

மேடம்: பிரயாணம், தேக நலக்குறைவு, வைத்தியச் செலவு, கடன்படல்.

இடபம்:பகைநீக்கம்,தொழில் விருத்தி, சுபயோசனை, பணவரவு.

மிதுனம்: பூமிப்பலிதம், குடும்ப ஒற்றுமை, மனஉறுதி, மதிப்பு.

கடகம்: தேகாரோக்கியம், தொழில் ஊக்கம், ஊழியர் உதவி, பிரயாணசுகம்.

சிங்கம்: தொழிற்றுமதம்,எதிர்ப்புக்கள் அதிகரித்தல், உறவினர் தொல்லை, பணமுடை.

கன்னி: வருமானஅதிகரிப்பு, தொழில் நலம், செலவு அதிகரித்தல், நண்பர் தொடர்பு,

துலாம்: சுபசெய்தி,இலாபம், ஊழியர் உதவி, செய்காரிய சிறப்பு.

விருச்சிகம்: போசனசுகம், தொழில் ஊக்கம், கடும் உழைப்பு, மதிப்பு.

தனு: செய்காரிய தாமதம், மனக்கவலை, பிரயாணம், ஊழியர் இடர்.

மகரம்: பெரியோர் சந்திப்பு, முயற்சிவெற்றி, பணவரவு, சுபசெய்தி.

கும்பம்: தொழிற் சிறப்பு, சகோதரவழி உதவி, இன்பசிந்தனை, குடும்பசுகம்.

மீனம்: மனத்திடம், குடும்பசுகம், தொழில் விருத்தி, மதிப்பு.


## வரி விளம்பரம்

### தேவை

இளமரமும் காய்வளவு உள்ளதுமான ஓர் தென்னந்தோட்டம் 70—100 ஏக்கருக்குள் தேவை. தயவுசெய்து கரூரான விலையுடனும் முழு விபரத்துடனும் எஸ். பீ. சோமசுந்தரம் புரோக்கர் வல்வெட்டித்துறைக்கு மனுச்செய்யவும்.

### இராமநாதன்இசைக்கல்லூரி மருதனார்மடம்

புது வகுப்புகளிற் சேர விரும்புவோர் ஜூன் மாதம் 15-ந் திகதிக்குள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை அனுப்ப வேண்டும். அதற்குப் பிறகு இவ்வாண்டில் இவ்வகுப்புகளிற் சேர்வதற்கு வசதியிராது.

மகாராஜபுரம் சந்தானம்
அதிபர்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15.50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# "சமரச சபைகளை சனசமூக நிலையங்கள் நிறுவவேண்டும்"

## முதலியார் தியாகராஜா யோசனை

மாவிட்டபுரம், திங்கள்

"சனசமூக இயக்கம் கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தியுள்ளது இந்த இயக்கம் வளரவேண்டுமானால் இது ஒரு ஜனநாயக இயக்கமாக இருக்கவேண்டும். விழிப்புடைய நேர்மையான தலைவர்கள் இந்த இயக்கத்தை நேர்மையான முறையில் நடத்தவேண்டும். நமது இலங்கையில் இந்தப் பெரிய இயக்கம் மக்களின் தூண்டுதலிலும் பார்க்க அரசாங்கத்தின் ஆதரவிலேயே முக்கியமாக வளர்கிறது. எதிர்காலத்தில் இந்த நிலை மாறித தன்னையே தனக்குதவி என்ற நிலை ஏற்படவேண்டும்."

மாவிட்டபுரம் மத்திய சனசமூக நிலையத்தின் 4-வது ஆண்டுவிழாவுக்குத் தலைமை வகித்த இராசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினர்.

"சனசமூக இயக்கமூலம் தான் சமூக, கலாச்சார வளர்ச்சியையும், ஐக்கியத்தையும் நிலைநாட்ட முடியும். சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க இந்த இயக்கத்தினால்தான் முடியும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை மக்களிடையே உண்டாக்கவேண்டும். அப்படி உண்டாக்கினல்தான் சகோதர சமத்துவ வாழ்வு ஏற்படும்" என்று முதலியார் தியாகராசா மேலும் கூறினர்.

கிராமமக்களின் பிரச்சினைகளையும், பிணக்குகளையும் தீர்க்க சனசமூக நிலையங்கள் சமரச சபைகளை அமைக்கவேண்டும். அத்தகைய சபைகளாற்றான் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டமுடியும் என்றும் அவர் கூறினர்.

அடுத்ததாக யாழ் மாவட்ட சனசமூக நிலையச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் பேசுகையில், சனசமூக நிலையங்கள் வாசிகசாலைகளை மாத்திரம் வைத்துக்கொண்டிருப்பதுடன் திருப்திப்பட முடியாதென்றும் இந்த இயக்கத்தைக் கிராம மக்கள் தக்கவகையில் பாவிக்க வேண்டுமென்றும் கூறினர்.

"பிறநாடுகளுக்குக் கலாச்சாரத் தூதுக் கோஷ்டிகளை அனுப்பும் அரசாங்கம் இந்த நாட்டிலுள்ள பல்வேறு சமூக மக்களிடையே ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டும்பொருட்டும் இந்தநாட்டின் பல்வேறு சமூகங்களிடமிருந்தும் குறிப்பிட்ட சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கலாச்சார தூதுக்குழுக்களாக அனுப்ப முயலவேண்டும். இந்நாட்டில் உள்ள பல்வேறு சமூகங்களிடையும் ஒற்றுமையை உருவாக்கவும், தப்பபிப்பிராயங்களைப்போக்கவும் இது உதவும்" என்று அவர் கூறினர்.

திரு. ஏ.ரி. பொன்னுத்துரையும் மற்றும் பலரும் பேசினர்.

# அன்பும் பொறுமையுமே ஆசிரியரின் அணிகலன்கள்

## ஓய்வுபெறும் ஆசிரியரின் அறிவுரை

மட்டக்களப்பு, ஞாயிறு

"எந்த நேரத்திலும் ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில் அன்புள்ளவர்களாகவும் பொறுமையிழக்காதவர்களாகவும் இருக்கவேண்டும். அன்பையும் பொறுமையையும் அணிகலனாகக்கொண்ட ஆசிரியர்களினால்தான் நீண்ட காலத்திற்கு சேவைசெய்யமுடியும்"

கல்லடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரிய மாணவர்களால் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் திரு. ச மயில்வாகனம் மேற்கண்டவாறு கூறினர்.

கல்லடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தொடர்ந்து 16 வருடகாலம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கண்ணப்பர் மயில்வாகனம் ஆசிரியர் தமது அறுபதாவது வயதில் ஓய்வுபெறுவதை முன்னிட்டு இப்பிரியாவிடை வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டது.

திரு. இ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசாரத்தில் பாடசாலை பெற்றுர், ஆசிரியர், மாணவர்கள் சார்பில் திரு. மயில்வாகனத்திற்குப் பிரிவுபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. திரு. மயில்வாகனம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஆசிரியர்கள் எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்கு அடிக்கவே கூடாது. எனக்கு அறுபது வயதாகியும் இதுவரை நான் மாணவர்களுக்கு அடித்ததே கிடையாது. அடித்துப் பயமுறுத்தினல்தான் மாணவர்கள் படிப்பார்கள் என நினைப்பது பெரும்தவறு. அன்பாகப் பேசி மாணவர்களைப் படிக்கத்தூண்டுவதே சிறந்தது.

திரு. இ. சங்கரப்பிள்ளை, திரு. ஏ. ஜோசப், திருமதி. த. சரஸ்வதி ஆகியோரும் ஆசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

# "நிலத்தையும் கடலையும் பயன்படுத்துக"

மட்டக்களப்பு, ஞாயிறு

"இன்றைய இளைஞர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கப்போகிறது. உங்களை எதிர் நோக்கியிருக்கும் பேராபத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் இப்பொழுதே உத்தியோக மோகத்தை விடுத்து நிலத்தையும்-கடலையும் பயன்படுத்தி நாட்டை வளம் பெறச் செய்யவேண்டும். இந்த முயற்சி உங்கள் வாழ்வையும் வளம் பெறச் செய்யும்."

கிழக்கிலங்கை இளைஞர் விவசாயக் கழக பொதுக் கூட்டத்தில் பேசுகையில் மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லடி உப்போடை கிராம சபைக் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. எஸ். பொன்னுத்துரை தலைமை தாங்கினர்.

திரு. கே. ஓ. வி. கதிர்காமத்தம்பி, திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை, மற்றும் விவசாயப் போதனசிரியர் திரு. ஆர். இராசநாயகம் ஆகியோரும் பேசினர்.

மண்முனை வடகிழக்கு வடபிரிவில் ஓர் விவசாயப் பண்ணை அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

# அந்நிய டாக்டர்கள் வேண்டாம்

லண்டன், மே 20

அந்நிய டாக்டர்களை இனி சேவைக்கமர்த்துவதில்லை என பர்மிய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. பற்றுக்குறை காரணமாக இதுவரை அந்நிய டாக்டர்கள், (பெரும்பாலும் இந்திய டாக்டர்கள்) அங்கு சேவைக்கமர்த்தப் பட்டிருந்தனர்.


**மாமைட் எனக்கும் என் குடும்பத்தாருக்கும், நற்சுகமும் பெலனும தருகிறது**



நாம் வயாரும் நன்றாய் சாப்பிடுகிறோம். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய்இருக்கிறோம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உஙகள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும் போழுது அதிகக் டியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




**மாமைட்**

# லாவோஸ் சமரசத்தில் வலதுசாரிகள் அக்கறை இலாகாக்கள் பற்றிய தகராறில் முன்னேற்றம்

ரங்கூன், மே 21

லாவோஸில் கலப்பு அரசாங்கம் ஒன்றை விரைவில் அமைக்க முடியுமெனத் தாம் நம்புவதாய், நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவர்ணபூமா அறிவித்தார். ஐரோப்பாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் கல்கத்தா நிருபர்களிடம் அவர் மேற்கண்டவாறு கூறினர்.

தாய்லந்துக்கு அமெரிக்கா, துருப்புக்களை அனுப்பியது குறித்துத் தாம் வருந்துவதாயும் அவர் கூறினர். இந்தியா தலைமையிலுள்ள லாவோசுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் அந்நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட நல்ல வழியில் சேவைசெய்து வருகிறது என்றும் தாய்லந்திலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் லாவோஸுக்கு அனுப்பப் படமாட்டாது என அமெரிக்கா தமக்கு அறிவித்திருக்கிறது என்றும் இளவரசர் கூறினர். இளவரசர் பூமா இன்று ரங்கூன் வந்துசேர்ந்தார். "விரைவில் நற்செய்தி வெளியாகும்" என்று அவர் கூறினர்.

லாவோஸில் உள்விவகாரம், பாதுகாப்பு ஆகிய இலாக்காக்களை இளவரசர் சுவர்ணபூமாவிடம் ஒப்படைக்க வலதுசாரித்தலைவர்கள் இணங்கியிருப்பதாயும், இந்தப் பிரச்னைதான் முன்பு மூன்று இளவரசர்களுக்கிடையில் நடைபெற்ற சம்பாஷணையில் முட்டுக்கட்டைக்கு பிரதான அம்சமாய் இருந்ததென்றும் அறிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் வெசாக் கொண்டாட்டம்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு பௌத்த சங்கத்தின் ஆதரவில் இம்முறை வெசாக் கொண்டாட்டம் மிக அமைதியான முறையில் நடத்தப்பட்டது. மட்டககளப்பு ஆஸ்பத்திரியிலும், மாந்தீவு ஆஸ்பத்திரியிலும் உள்ள நோயாளர்களுக்கு பௌத்த சங்கத்தினுல் வெசாக் விருந்துகள் அளிக்கப்பட்டன. மட்டக்களப்பு மங்களாராமய பௌத்த ஆலயத்தில், வெள்ளிக்கிழமையும். சனிக்கிழமையும் விசேஷ வழிபாடு நடைபெற்றது. வெள்ளிக்கிழமை இரவு வண. மங்கள ரட்ணசிறி தேரோ 'பண' பிரசங்கம் தமிழில் நிகழ்த்தினர். சனிக்கிழமை இரவு சிங்களத்திலும் 'பண' பிரசங்கம் நடத்தப்பட்டது.

# முல்லைத்தீவில் காணிகள் பெற்ற தமிழர் விபரம் என்ன?

## காணிமந்திரியிடம் இன்று கேட்கவிருக்கும் கேள்விகள்

கொழும்பு, திங்கள்

நாளை ஜனப்பிரதிநிதிகள் சபை பிற்பகல் 2 மணிக்குக் கூடும்பொழுது முல்லைத்தீவு, வவனியாப் பகுதிகளில் மத்திய வகுப்பினருக்கெனக் கொடுக்கப்பட்டுள்ள காணி பற்றிய கேள்விகள் சில கேட்கப்படவிருக்கின்றன. இக்கேள்வியை திரு. ஜே. வி. குணசேகரா விவசாய காணி நீர்ப்பாசன மந்திரியைக் கேட்கவிருக்கிருர்.

இவரை விட திரு. தகநாயக்கா, திரு பாரிஸ் பெரேராக ஆகியோரும் விவசாய காணி மந்திரியிடம் சில கேள்விகள் கேட்கவிருக்கின்றனர். அத்துடன் கல்வி மந்திரியிடம் சாஹிராக் கல்லூரி பற்றிய கேள்வியொன்றை திரு. எல். பி. சநாயக்கா கேட்கவிருக்கிருர்.

"தென்னை பயிரிடுவதற்கென மத்திய வகுப்பினர் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவுப் பகுதியில் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதை மந்திரி அறிவாரா? எத்தனை ஏக்கர் இத்திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது? கொடுக்கப்பட்டுள்ள நிலங்களின் விஸ்தீரணமென்ன? காணி பங்கிடுவதற்கு போதாமையின் காரணமாய் தகுதியுடையவர் களாயிருந்தும் காணி கொடுக்கப்படாதோர் தொகை என்ன?

"அப்பகுதியிலுள்ள காரியாதிகாரிகளும், தமிழ் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மற்றும் செல்வாக்குடையோரும் 50 ஏக்கர் காணியைத் தம் பேரிலும் ஏனையவற்றை தம் மனைவியரது பேரிலும் பதிவு செய்துள்ளது பற்றி மந்திரி ஏதும் அறிவாரா? அவர்களின் பெயர்ப்பட்டியலொன்று தர முடியுமா? இங்கே நிலம் பெற்றவர்களில் சிலருக்கு வவனியாப்பகுதியிலும் மானவாரி நெற்செய்கைக்கேற்ற காணி கொடுக்கப்பட்டுள்ளதையும் மந்திரி அறிவாரா?

"நாட்டின் மற்றைய பகுதிகளில் ஏற்பட்டுள்ள காணி பற்ருக்குறையை முன்னிட்டு வட - கிழக்கு மாகாணங்களில் இவ்விதமாகக் காணி கண்டபடி பங்கீடு செய்யப்படுவதை தடுப்பதற்கான கடுமையான நடவடிக்சையை மந்திரி எடுப்பாரா? காணியில்லாத பகுதிகளிலிருந்து வரும் சிலருக்கு இவ்வாண்டு மாகாணங்களில் கூட்டுறவுப் பண்ணைகளை ஸ்தாபிப்பதற்கான திட்டத்தைப் பற்றி மந்திரி யோசிப்பார?"

இக்கேள்விகளையே திரு. குணசேகரா கேட்கவிருக்கிருர்.

அடுத்து காலிப் பிரதிநிதி திரு. டபிள்யு. தகநாயக்கா விவசாய நிலப்பகுதி மந்திரியிடம் பின் வரும் கேள்வியைக் கேட்பார்.

"சீனக்குடாவிலிருக்கும் இலங்கை வனப் பயிற்சியாளர் கல்லூரியில் தற்பொழுது பயிசி பெறும் 21 பயிற்சியாளர்களும் வன பரிபாலன சேவையில் ஏற்கனவே 14 வருட சேவையுடையவர்கள் என்பதை மந்திரி அறிவாரா? 1957ல் நிறுத்தப்பட்ட வனத்துறை'ப் பயிற்சி பாடசாலையில் இவர்கள் பயிற்சி பெற்றுள்ள போதிலும் இவர்களுக்கு மேலும் பயிற்சியளிபபதன் நோக்கமென்ன? புதுப் பயிற்சியாளர்களை வனப் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டிய நடவடிக்கைகளை மந்திரி மேற்கொள்வாரா? மேலும் இக்கல்லூரி வீண் செலவு செய்யும் ஒரு ஸ்தாபனமாக இருப்பதனுல் இது பற்றி மந்திரி விசாரணை நடத்துவாரா?"

திரு. ஜி. ஜே. பாரிஸ் பெரேரா விவசாய காணி மந்திரியிடம் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்கவிருக்கிருர்.

"நாவலப்பிட்டித் தொகுதியில் வேலண்டன் எஸ்டேட்டிற்குச் சொந்தமான மெதகொட என்னும்தோட்டத்தைக் கொள்வதற்கான உத்தேசத் திட்டம்மொன்றுண்டென்பதை மந்திரி அறிவாரா? மிகச் சிறந்த தோட்டங்களைக் கொள்வது தான் அரசாங்கத்தின் கொள்கையா? தோட்டச் சொந்தக்காரர் தோட்டத்தை நல்ல விலையில் விற்பதற்கு பல முயற்சிகள் எடுத்து வெற்றி பெருத பட்சத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

# அல்ஜீரியாவில் 40 பயங்கரவாதிகள் கைது

அல்ஜீயர்ஸ், மே 21

அல்ஜீரியாவில் பயங்கரவாதிகள்மீது பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அல்ஜியர்ஸில் 200 முஸ்லிம் போலிஸ் வீரர்கள் புதிதாகக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒ. ஏ. எஸ். பயங்கரவாதிகள் எனக் கருதப்பட்ட 40 பேர் கைதுசெய்யப்பட்டனர். பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டுவந்ததாகக் கூறப்படும் 100 மதுபானக் கடைகளும், உணவுச்சாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. நேற்றைய சம்பவத்தில் அங்கு 20 பேர் கொல்லப்பட்டனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டபின் அல்ஜீரியாவில் 3000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாயும், ஆனல் இக்கொலைகளில் ஈடுபட்ட ஒரு பயங்கரவாதிக்காவது இதுவரை மரணதண்டனை விதிக்கப்படவில்லை என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

அல்ஜீரிய விவாகாரங்களுக்கான பிரஞ்சு மந்திரி ஓரான் போய்ச் சேர்ந்துள்ளார்.

# "தமிழ்ப் பகுதிகளில் தமிழே நிர்வாக மொழி"

## கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைபற்றி திரு. கெனமன்

உடுப்பிட்டி, ஞாயிறு

"அன்று தொடக்கம் இன்று வரை தமிழ்ப் பகுதிகளில் தமிழ்மொழியே நிர்வாகமொழியாக இருக்க வேண்டுமென்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி திட்டவட்டமாக கூறிவந்துள்ளது. எதிர்காலத்திலும் இக்குறிக்கோளையடையக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடுமென்பது நிச்சயம்."

இவ்வாறு இன்று காலை திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் திரு. பீட்டர் கெனமன் கூறினர். தொடர்ந்து திரு. கெனமன் கூறியதாவது.

"சமீபத்தில் நடைபெற்ற இராணுவப் புரட்சிச்சதி, தற்செயலாக நடைபெற்றதொன்றல்ல. பாடசாலை எடுப்பு, தேசிய மயக் கொள்கை ஆகிய முற்போக்குக் கொள்கைகளை எதிர்த்துத் தோல்வியுற்ற பிற்போக்குச் சக்திகளின் திட்டமிடப்பட்ட சதியேஅது. இன்று இராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பின் நாட்டில் ஜனநாயக சக்திகளுக்கு வாய்ப்பூட்டுப் போடப்படுவதுடன், பொது மக்களும் அனேக கஷ்டங்களுக்கு இலக்காகியிருப்பார்கள்."

அடுத்து வரவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது:- "அடுத்த வரவு செலவுத் திட்டம் ஏழைகளின் வரவு செலவுத் திட்டமாயிருக்கவேண்டும். பணற்காரர்மீது கூடுதலான வரிகளைச் சுமத்தி ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வரவு செலவுத் திட்டமாக அது அமையவேண்டுமென்று இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள், ஆலோசனைக் கமிட்டிகளை அமைத்து, தேசிய ரீதியான முறையில் பொது மக்களின் கையெழுத்துகளைத் திரட்டிவருகின்றனர் இவ்வியக்கத்தில் வட இலங்கை மக்கள் தென்னிலங்கை மக்களுடன் இணைந்து போராடுமாறு வேண்டுகிரேம்."

"அரசாங்கத்திடம் நிதிப்பற்ருக் குறை இருக்கிறதென்பதை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், தற்போதுள்ள வரிச்சுமையை உயர்த்தாமல் அந்நிய சொத்துக்களைத் தேசிய மயமாக்குவதன் மூலம் நமது நிதி நெருக்கடியைச் சமாளிக்கலாம்"

"தமிழ்ப்பிரதேசங்களின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனக் கூறும் தமிழரசுக்கட்சியினர், மக்கள் வங்கிகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுவதை ஏன் எதிர்க்கவேண்டும்? கோர்ட்டுகளில் தமிழில் கருமம் ஆற்றக் கூடியதாக இருக்கையில் தமிழ் வழக்கறிஞர் தமிழில் கருமமாற்ருது ஆங்கிலத்தில் ஆற்றுவது ஏன்?

இசைக்கலைஞரை வெளிநாடுகளிலிருந்துவரவழைக்க வேண்டாமென்றும், உள்ளூரிசையாளருக்கு வேண்டிய உதவியை அரசாங்கம் அளிக்கவேண்டுமென்றும் இங்குள்ள இசையாளர் சங்கம் கேட்டதன்பேரில் நான் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சென்றபோது அமைச்சருடன் நல்லூர் எம். பியும் இருந்தார். ஒரு கோவில் உற்சவத்துக்காக வெளிநாட்டிலிருந்து இசைக்கலைஞர்களை வரவழைக்க அனுமதி வழங்குமாறு அவர் அமைச்சரைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

திருவாளர்கள் வி. பொன்னம்பலம், நவரத்தினம் ஆகியோரும் பேசினர்கள். திரு கே. சின்னத்தம்பி, கந்தையா ஞாபக கீதங்கள் பாடினர்.

# மேற்கு இரியான் இணையும் வரை தேர்தல் இல்லை

## இந்தோனேஷியப் பிரதமர் அறிவிப்பு

ஜாகர்த்தா, மே 21

மேற்கு இரியான் இந்தோனேஷியக் குடியரசின் ஒரு பகுதியாக இணையும்வரை இந்தோனேஷியாவில்பொது தேர்தல் நடைபெற மாட்டாது என்று இந்தோனேஷிய பிரதமர் டாக்டர் ஜுவான்டா அறிவித்துள்ளார்.

1955-ம் ஆண்டில் இந்தோனேஷியாவில் பொதுத் தேர்தல் நடைபெற்றபின் அங்கு இவ்வருடம் தேர்தல் நடைபெறுவதாகவிருந்தது.

மேற்கு இரியான் பிரச்சினைக்கு இவ்வாண்டு இறுதிக்குள் எதுவிதத்திலும் தீர்வுகாண விருப்பதாக இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்ணே சென்ற சனிக்கிழமை தெரிவித்தார்.

மேற்கு இரியானில் டச்சுக்காரருக்கும் இந்தோனேஷியருக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் இந்தோனேஷியர்கள் பெரும் வெற்றி ஈட்டியுள்ளதாக இந்தோனேஷிய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்கு இரியான் தெற்குக் கரையில் டச்சுச் துருப்புக்கள் 18 பேர் கொல்லப்பட்டதாகவும் மற்றவர்கள் சிதறியோடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குக் கரையில் இந்தோனேஷிய 'பாரசூட்' துருப்புக்கள் இறங்கியதும் டச்சுத் துருப்புக்கள் விரைவாக நடவடிக்கை எடுத்து மடக்கியதாகவும் இதில் இரண்டு இந்தோனேஷியர் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் டச்சு அரசாங்கத் தரப்பினர் அறிவித்தனர்

——

## சீனவிலும் வெள்ளம்

பீகிங், மே 20

சீனவிலுள்ள குவாண்டங் மாகாணத்தில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுப் பல பண்ணைகள் நீரில் மூழ்கிவிட்டதாயும், பீகிங்—காண்டன் ரயில் இணைப்பு நீரில் மூழ்கியிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

# வார்சா - நேட்டோ ஸ்தாபனங்கள்

## அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள யோசனை

சோபியா, மே 21

தாய்லாந்துக்கு அமெரிக்கா படைகளை அனுப்பியுள்ளதைப் பல்கேரிய அதிபரும் சோவியத் பிரதமர் குருஷ்சேவும் நேற்று வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில் கண்டித்துள்ளனர்.

இராணுவ மண்டலங்களையும் இராணுவ ஒப்பந்தங்களையும் அந்நிய பிரதேசங்களில் இராணுவ தளங்களையும் கலைத்துவிட இருநாடுகளும் தொடர்ந்து முயற்சிசெய்யுமென்று இரு தலைவர்களும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் வெளியிடப்பட்ட இந்தக் கூட்டறிக்கை கூறுகிறது.

"நேட்டோ" "வார்சா" ஒப்பந்த நாடுகள் ஸ்தாபனங்கள் அனைக்கிரமிப்புஒப்பந்தம்செய்துகொள்ளவேண்டுமென்றும் கூட்டறிக்கை கூறுகிறது.

## கராச்சியில் பிஸோ

கராச்சி, மே 21

பகை நாகர் தலைவர் திரு. பிஸோ லண்டனிலிருந்து கராச்சிக்கு வந்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

——

## குவாட்டிமாலா

லண்டன், மே 20

குவாட்டிமாலாவில் கடந்த 4 மாதங்களாக அமுலிலிருந்த நெருக்கடி காலநிலைத்த்துர செய்யப்பட்டது.

### மணி வாக்கு

உருவத் தோற்றத்தில் எதுவும் இல்லை. அது அழிந்து போய்விடக் கூடியது. நிலைத்திருப்பது நல்ல குணம்தான். இதயப் பரிசுத்தத்தில்தான் உண்மையான அழகு குடிகொண்டிருக்கிறது.

— காந்தியடிகள்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 9 உ (22-5-62)

## வாழ்க்கைப் பிரச்சினை

பண்பான வாழ்வு நடாத்திய தமிழினம் இன்று பல்வேறு இன்னல்களுக்குள்ளாகி வருவதை யாழ்ப்பாணம் மாவட்ட உதவி நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டிற் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களின் இன்றைய வாழ்க்கையில் வயிற்றுப் பசிதான் இருக்கின்றது. ஏமாற்றங்கள்தான் நிறைந்துள்ளன. சிக்கல்கள் விழுந்த நூற் சுருளில் முதல் எங்கே முடிவு எங்கே என்று தெரியாத மாதிரி இன்றைய பிரச்சினைகள் ஒரே சிக்கலாகப் போய்க்கொண்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு காலத்தில் வாழ்க்கையில் பிரச்சினைகள் இருந்தன. இன்று பிரச்சினைகளில் வாழ்வு இருக்கின்றதென அவர் கூறியிருப்பது தமிழினத்துக்குமாத்திரமன்றி உலக மக்களனைவருக்குமே பொருத்தமானது. முன்னர் எல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே அவநம்பிக்கைகள் இருந்தன; இன்றோ சந்தேகங்களின் மத்தியில்தான் வாழ்க்கை அமைந்துள்ளதென உதவி நீதிபதி கூறியிருப்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

இந்த அவலநிலைக்குக் காரணமென்ன? ஆன்மீக எழுச்சி குன்றி அரசியலில் மக்களனைவருக்கும் ஏற்பட்டுள்ள 'எழுச்சி'யே காரணமென அவர் கருதுகின்றார். தேள் கொட்டியவனுக்கு ஏனைய உணர்வுகள் எல்லாம் மறைந்து வலி ஒன்றுமட்டுமே உறைப்பது போல இன்று மக்களிடையே அரசியல் எழுச்சி ஒன்றே தலை தூக்கி நிற்பதை அழகாக விளக்கியிருக்கின்றார்.

இந்த நாட்டின் மிகப் பெரிய இரு பிரச்சினைகளையும் அவர் எடுத்துக்காட்டத் தவறவில்லை. ஒன்று: வேலை கிடைக்காத வாலிபர்கள். இரண்டாவது: திருமணமாகாத பெண்கள். பெரும்பாலான தற்கொலைகளுக்கும், கொலைக் குற்றங்களுக்கும் இந்த இரு பிரச்சினைகளுமே காரணமென அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார நிலைமையை வளமாக்காதவரை வேலையில்லாத் திண்டாட்டத்துக்குத் தீர்வுகாண முடியாது. சீதன முறை நாட்டில் நிலவும்வரை திருமணமாகாத பெண்களின் தொகையும் பெருகிக் கொண்டேயிருக்கும். படித்த வாலிபர்கள் சீதன முறையை ஒழித்துக்கட்ட முன்வருவார்களாயின் இந்த அநாகரிக முறையை ஓரளவு நீக்கலாம். வாழ்வதற்கு மருந்து தெரியவில்லை. அந்த அருமருந்து கிடைக்கும்வரை சாவதற்குத்தான் மருந்து தேடிக்கொண்டிருக்கிறார்கள் என உதவி நீதிபதி கூறியதை எண்ணும்போது வாழ்க்கைப் பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலாகியுள்ளதென்பது நன்கு விளங்குகின்றது.

பொருளாதார சுதந்திரம் வாழ்க்கையில் மலர்ச்சியை உண்டாக்குவதாயினும் நீதிபதி குறிப்பிட்டிருப்பது போல் ஒழுக்கம், நாணயம், பண்பு ஆகிய நியாயங்கள் பொது வாழ்க்கையில் வேரூன்ற வேண்டும். மனம் வளர்ந்து மனித இனம் மேம்படுவதற்கும் இவையே முக்கியம் எனலாம்.

# ஆளுடைய பிள்ளையார் அருளிய அற்புதச் சாதனைகள்

— க. வை. ஆ. சர்மா —

**சைவ சமயிகளுள் மூன்று வயதிலே மெய்ஞ்ஞானம் பெற்றுச் சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்டவர் திருஞானசம்பந்தர். அவரது குருபூசை வைகாசி மாதத்து மூலத்திருநாளாகிய இன்றைய தினமாகும். அவருடைய அற்புதச் சாதனைகளைத் தெரிவிக்கிறது இக்கட்டுரை.**

விரிந்து பரவியது இவ்வுலகம். விரைந்து கழிவது காலம். சுருங்கி நிலையற்றது மனித வாழ்வு. பெருகிவாழ என்னும் மனிதன் நிலைத்து வாழநினைக்கின்றானில்லை. மண்ணிலே வாழ்ந்து மனம் அடங்காத இக்கால மனிதன் விண்ணிலே தாவிச்சென்று வாழ முனைந்து விஞ்ஞானத்தின் துணையை நாடுகின்றான். எனினும் விஞ்ஞானத்தையும் வெல்லக்கூடிய மெஞ்ஞானம் ஒன்று இருக்கிறது என்பதை இன்று உணர்கின்றானில்லை. விஞ்ஞானம் என்பது விசேஷ அறிவு, நுட்ப புத்தியினால் நுணுகி ஆராய்ந்து அறிய வல்லது. மெஞ்ஞானம் என்பது உண்மையறிவு; மனிதன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இப்பிரபஞ்சம் முழுவதையும் இயக்குகின்றதென்பதை நம்பி உள்ளத்திலே கொண்டு உறத் தியானிப்பவரிடத்தே உதிப்பது. அவ்வாறு உதிப்பதற்கும் இறையருள் வேண்டும். சைவ சமயிகளுள் மூன்று வயதிலே மெஞ்ஞானம் பெற்றுச் சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்டவரே திருஞான சம்பந்தப்பெருமான். அவரது குருபூசை வைகாசிமாதத்து மூல திருநாளாகிய (22–5–62) இன்றைய திருநாளாகும்.

### ஆட்கொள்ளப் பெற்றமை

தென்னிந்தியாவிலே சோழ வளநாட்டிலே பிரமபுரம் முதலாகப் பன்னிரண்டு திருப்பெயர்கொண்ட சீர்காழிப்பதி சிவப்பேறுடையது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு தமிழ்நாட்டிலே சமணம்,பௌத்தம் என்னும் புறப்புறச் சமயங்கள் தலைப்பட்டுச் சைவம் மங்கியிருந்தகாலம். சிவபாத விருதயர் என்னும் அந்தணகுல திலகரும் அவர் பத்தினி பகவதியாரும் செய்தவப்பயனாகச் சைவத்தை நிலைநாட்ட அவதரித்தார் திருஞானசம்பந்த சுவாமிகள். உலகமுய்யத் தோற்றிய முருகப்பிரானது திருவருள் ஒளி அக் குழந்தையாரிடத்துக் காணப்பட்டது வியபபாகாது. ஏனெனில், அன்று சரவணப் பொய்கையில் உதித்த ஆறுமுகனை உலக மாதாவாகிய அம்மையும் அப்பரும் சென்று எடுத்து உச்சிமோந்து அருள் பாலித்தனர். இன்று சீர்காழித் திருக்குழக்கரையில் ஞானக் குழந்தையின் அழுகை ஒலி கேட்டவுடன் அதே அம்மையும் அப்பரும் விரைந்து வந்து குழந்தையைக் கட்டியணைத்து அழுகை மாற்றியதோடு, அம்மையார் பரஞானம் அபரஞானம் என்னும் தமது உண்ணுமுலை சுரந்த ஞானப்பாலமுதை அவருக்கு ஊட்டினர். இவ்வாறு அக்குழந்தை ஆட்கொள்ளப்பெற்றமையால் மெஞ்ஞானத் தொடர்புகொண்டு ஞானசம்பந்தர் என்றும், ஆளுடைய பிள்ளையென்றும் போற்றப்பட்டு வத்சமார்க்கந்தழுவி இறைவன் திருக்குழந்தையானார். குளக்கரையிலே குழந்தை பால்குடிப்பதைக் கண்ட பிதாவாகிய சிவபாதவிருதயர் "எவர் கொடுத்த எச்சிற்பாலைக் குடிக்கிறாய்" என்று கடிந்தபோது, அக்குழந்தைப் பெருமான் வானத்திலே காட்சிதரும் அம்மையாரைத் தனது சுட்டுவிரலால் சுட்டிக் காட்டிக் கூறிய விடையே "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் முதற் பாசுரமாகும்.

சிவபிரானைக் குறிப்பிடுவதற்காகத் தேவாரம் பாடத் தொடங்கிய சம்பந்தப் பிள்ளையாரது திருவாக்கிலே, பெருமானைக் குறிக்கும் வேறு எந்தச் சொல்லும் வராமல் "தோடுடைய செவியன்" என்ற தொடர் ஏன் வந்தது என்பது எவரிடத்தும் எழக்கூடிய ஒரு கேள்வி. சிவபிரானது வலத் திருச் செவியிலே விளங்குவது ஆண்கள் அணியும் குண்டலம், இடத்திருச் செவியிலே காண்பது அம்மையார் அணியுந் தோடு. முதலில் அப்பனைச் சொல்லவும் வேண்டும், அம்மையை மறக்கவும் முடியாது என்ற நிலையில் பால் குடித்துக்கொண்டிருக்கும் பிள்ளையாருக்கு இறைவனது இடப்பாகத்தே தோன்றும் தோடு நினைவில் அமைந்தது அவரது சாதுரியச் சிறப்பைக் காட்டுகிறது. இதற்கு அகச்சான்றாக அமைவது பின்பு ஒருமுறை திருக்கழுமலம் எனப்படும் சீர்காழியில் பெருமானைக் குறித்து "மணணினல்ல வண்ணம்" என்று தொடங்கிப் பாடிய பதிகத்துப் பின்வரும் பாசுரமாகும்:-

"போதையார் பொற்கிண்ணத்
தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
தான் எனை யாண்டவன்
காதையார் குழையினன்
கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும்
பெருந்தகை இருந்ததே."

### பொற்றாளம் பெற்றமை

சம்பந்தப் பெருமான் தந்தையாரது திருத்தோளில் இருந்தபடி தலயாத்திரையாகத் திருக்கோலக்கா என்னும் திருப்பதிக்கு எழுந்தருளினார். திருச்சந்நிதியில் நின்று "மடையில் வாளை" என்ற திருப்பாசுரம் பாடியபோது பஞ்சாக்கரம் வரையப்பட்ட இரண்டு பொற்றாளங்கள் இறைவன் திருவருளால் பிள்ளையாரது திருக்கரத்தில் கிடைத்தன. பின்பு அவர் தேவாரம் பாடும்போதெல்லாம் வெறுங்கையால் தாளம் ஒற்றுவதைவிட்டு அப்பொற்றாளங்களைப் பயன்படுத்துவாராயினர்.

### முத்துச் சிவிகை முத்துக்குடை பெற்றமை

புகலியர் கோன் திருநெல்வாயில் அரத்துறைக்கு வந்தபோது தந்தையாரது தோளிலின்றும் இறங்கி நடந்து இளைத்தார். எம்பிரான் திருவருளால் அங்கு முத்துச் சிவிகை, முத்துக்குடை, ஊது கொம்பு முதலான சின்னங்களைக் கிடைக்கப்பெற்றார். பிள்ளையார் அவற்றைக் கண்டு அதிசயித்து அங்கு எழுந்தருளிய பிரானைக்குறித்து "எந்தை ஈசன் எம்பெருமான்" என்று தொடங்கும் பதிகம் பாடித் திருவைந்தெழுத்தோதிச் சிவிகையில் அமர்ந்து யாத்திரை செய்யத் தொடங்கினர்

ஞானசம்பந்தப் பெருமான் தமக்கு உபநயனச் சடங்கு நிறைவேறியபோது "துஞ்சலுந்துஞ்சலிலாத போழ்தினும்" என்று தொடங்கும் பதிகம் பாடியருளினர். அம்பாசுரத்திலே சமயப் பிரவேசம் செய்த மக்கள் செய்யும் சந்தியாவந்தன மந்திர செபப்பேறு, வேதமோதுவதனால் வரும் நிறைவு, அக்கினி காரியமாகிய ஓம வழிபாட்டின் செம்மை ஆகிய இவையெல்லாம் திருவைந்தெழுத்தாலாம் பயன் என்று விளக்கியருளினர்.

### யாழ்முடிப் பண் பாடியமை

பிள்ளையார் சிவத்தல யாத்திரை செய்யும்போது பாடும் திருப்பாசுரங்களைத் திருநீலகண்டப் பெரும்பாணர் அவர்பின் சென்று தமது யாழில் வாசிக்குந் தொண்டு புரிந்து வந்தார். பாணரைச் சேர்ந்தவர்கள் தமது அறியாமை காரணமாகச் சம்பந்தப்பெருமான் பாடும் தேவாரங்கள் பாணரது யாழினால் சிறப்படைகின்றன என்று இறுமாந்து கூறினர். இறைவன் திருவருட் பெருமையாவும் இசைக் கருவியுள் அடங்காது என்பதைக் காட்டத்திருவுளங்கொண்டு "மாதர் மடப்பிடியும்" என்ற பதிகம் பாடினார். அப்போது பாணர் அப்பாசுரம் யாழில் அடங்காமைகண்டு மனம் நொந்து யாழை உடைக்க முற்பட்டார். அதுகண்ட பெருமான் அவரைத் தடுத்து உம்மால் இயன்றவரையும் வாசியும் எனப்பணித்தார்.

### விடந் தீர்த்தமை

திருமருகல் தலத்தில் அரவந் தீண்டி இறந்துகிடந்த வணிகனைப் பிள்ளையார் "சடையாய் எனுமால்" என்ற தேவாரம் பாடி உயிர்பெற்றெழச்செய்தார் திருவிழிமிழலையில் அடியார் கூட்டத்துடன் சம்பந்த சுவாமிகள் ஒருமடத்திலும் திருநாவுக்கரசர் பிறிதொரு மடத்திலும் சிலகாலம் தங்கியிருந்தனர். அப்போது பஞ்சம் நேர்ந்தது. இறைவனருளால் தினமும் ஆலயப்படியில் இருவருக்கும் பொற்காசுகள் கிடைத்தன. அப்பருக்குமாற்றுயர்ந்த காசும் சம்பந்தப்பெருமானுக்கு மாற்றுக் குறைந்த காசும் கிடைக்கவே "வாசி தீரவே காசு நல்குவீர்" என்ற பாசுரம்பாடி நல்ல காசு கிடைக்கப்பெற்று அடியார் பசிதீர்த்தார்.

வேதாரண்ணியத்தில் வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கதவை அப்பர்,பாசுரம் பாடித் திறக்கச் செய்தார். சம்பந்தப் பெருமான் "சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்" என்ற தேவாரம் பாடி அக்கதவை மூடவும் திறக்கவும் வழி செய்தார்.

### வெப்புநோய் விலக்கியமை

பாண்டி நாட்டில் அரசனும் குடிகளும் சமணவயப் பட்டமையால் பிள்ளையாரை அங்கு வந்து சைவத்தை நிலைநாட்ட

(-5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

திருக்குறள் பத்தாவதுமாகாநாட்டை யாழ்ப்பாணம் போன்ற பட்டணத்தில் வைக்காமல் வேலணை போன்ற தூர இடத்தில் ஏன் வைக்க வேண்டுமென்று நண்பர் கேட்டார்.

தமிழ்மறைக்கழகம் அமைத்து தமிழ் கூறும் நல்லுலகனைத்தையும் வள்ளுவத்தின் மூலம் இணைத்துவரும் வித்வான் க. பொ. இரத்தினத்தார் பிறந்த ஊர் வேலணையாம். சென்ற பத்தாண்டுகளாக, திருக்குறள், திருவள்ளுவர் என்பதே அவரது பேச்சும் மூச்சுமாகும். தமிழையும் தெய்வீகத்தையும் நன்கு போற்றி வளர்த்து வருகின்றனர் வேலணைப் பொதுமக்கள்.

நாவலர் பெருமானின் திருக்குறள் உரைநூலை ரதத்தில் வைத்து சுமார் 3 மைல் தூரம் ஊர்வலமாகக் கொண்டுவருகையில், ஒவ்வொரு வீட்டிலும் பூர்ணகும்பம் வைத்து, தெய்வம்போல அதனை வழிபட்ட காட்சியே, அம்மக்களின் நற்பண்பைக் காட்டியது.

* * *

மாநாட்டுக்கென அழகான தனிப் பந்தல் அமைத்து அதற்குத் தொல்காப்பிய அரங்கு என்று பெயரிட்டிருந்தனர். வழியிலே ஒரு வரவேற்பு வளைவு அது 'காங்கிரீட்' கட்டிடமென்று நினைத்தார் நண்பர் ஆனால் உண்மையில் அது வெறும் அட்டைதான்! கலைஞரின் கைவண்ணம் அவ்வளவு நேர்த்தி!

வெளியே கொடிமரத்தில் இரு கொடிகள் பறந்தன. ஒன்று உலகெல்லாம் ஒளி பரபபும் ஞானசூரியன் போட்ட தமிழ்மறைக் கொடி மற்றொன்று இம்மாநாட்டைப்பொறுப்பேற்று நடத்தும் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தாரின் சக்கரக்கொடி.

உள்ளே பந்தலின் ஒவ்வொரு காலிலும் ஒரு திருக்குறள் நமக்கு நற்போதனை செய்தது. மின்விளக்குகளும், வேறு அலங்காரங்களும், மாநாட்டுப பந்தலை அழகுபடுத்தின. மழை மட்டும் வந்திருப்பின், எல்லாம் ஒரே தெப்பமாகியிருக்கும்! ஆனால் வான் சிறப்பைப் பாடிய வள்ளுவனாரின் விழாவை வருணன் வந்து குழப்பமாட்டாரென்று இரத்தினத்தார் திண்ணமாகக் கூறிவிட்டாராம்! எவ்வளவு உறுதி! அது அப்படியே பலித்தது தான் ஆச்சரியம்.

* * *

ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகப்பந்தல் தாங்காமல் ஏராளமாகக் குழுமியிருந்தனர். ஏதோ பெரிய கல்யாணம் போல் அப்பந்தல் காட்சி அளித்தது.

மேடை மீது திருவள்ளுவர் தெய்வீகத் தோற்றத்துடனே, ஒரு கையில் எழுத்தாணி வைத்து, ஏட்டுச் சுவடியில் திருக்குறள் எழுதக் காத்திருப்பவராகக் காட்சி அளித்தார். விபூதி, உருத்திராட்சம் எதுவுமில்லை.

திருவள்ளுவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவரென்று கோனார் அவர்களைக் கேட்டேன. "அதுதான் தெரியவில்லை. சைவரென்கின்றனர் சிலர், சமணரென்கின்றனர் சிலர். அவருக்கு வீபூதி உருத்திராட்சம் அணிவித்து ஒரு படத்தை சைவசிந்தாந்த சமாஜத்தார் வெளியிட்டுள்ளதைப் பார்த்தேன். நான் வைணவன். அவருக்கு நாமம் போட்டு வைணவராக ஒரு படம் வெளியிடலாமோ என்று யோசிக்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இவ்வித திருக்குறள் விழா தமிழ்நாட்டில் நடக்கிறதா? என்று கேட்டேன். அங்கு அப்படி எதுவுமில்லை என்றும், வள்ளுவர் ஆலயத்தில் நடக

(5ம் பக்கம் பார்க்க)

# “தகுந்த தலைவரிடம் அரசியலை விடுவோம்

## எல்லோரும் அரசியல் பேசி நேர்மை குன்றிவிட்டது

### வாழ்வதற்கு மருந்து கண்டால் சாவதற்கு மருந்து ஏன்?”

### வேலணை திருக்குறள் மகாநாட்டில் நீதிபதி தனபாலசிங்கம் முழக்கம்

வேலணை. திங்கள்

“இன்று இந்நாட்டில் வாழும் தமிழர்களிடையே ஆன்மீக எழுச்சியில்லை கவிதையும் காவியமும் உருவாகிற இலக்கிய எழுச்சியும் இல்லை. மூடப் பழக்கவழக்கங்களைப் போக்கித் துணிவான வாழ்க்கையைக் காட்டும் சமுதாய எழுச்சியும் இல்லை. தேள் கொட்டியவனுக்கு மற்றைய உணர்வுகள் எல்லாம் மறந்து, மறைந்து வலிஒன்று மட்டுமே உறைப்பது போல பள்ளிக்கூடச் சிறுவர்களிலிருந்து பல்போன கிழவர்வரை அரசியல் எழுச்சி ஒன்றே இருக்கிறது. கற்றவரும் மற்றவரும் நினைப்பதுவும் காண்பதுவும் பேசுவதும் எப்பொழுதும் அரசியல் விஷயங்களே. இதன் காரணமாக அரசியல் நேர்மை குன்றிய துறையாக மாறிவிட்டது கருத்துக்கள் பிடிக்காவிட்டால் கருத்துக்களோடு மட்டும் பகைத்துக் கொண்டு அவற்றை எதிர்த்துப் போரிட வேண்டும். கருத்துக்களுக்குப் பதிலாக ஆட்களை எதிர்க்கிற அநாகரிகம்தான் இன்று இங்கு வளர்கிறது. இந்நோயிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும். அரசியல் விஷயங்களைத் தகுந்த தலைவர்களிடமே விட்டுவிட்டு நாம் வேறு விஷயங்களில் கருத்தைச் செலுத்த வேண்டும்.”

இவ்வாறு வேலணை வாலிபர் முன்னேற்றச்சங்கத்தின் ஆதரவில் இங்குள்ள அம்மன் கோயில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்ற தமிழ் மறைக்கழகத்தின் 10-வது திருக்குறள் மகாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ்ப்பாணம் மாவட்ட உதவி நீதியரசர் திரு. செ. தனபாலசிங்கம் குறிப்பிட்டார். இன்றைய நிகழ்ச்சிகளின்போது மகாநாட்டுப் பந்தலின் உள்ளும் புறமும் பெருந்தொகையான மக்கள் கூடியிருந்தனர்.

திரு. தனபாலசிங்கம்மேலும் பேசியதாவது:

திருமறைக்கழகத்தின் தலைவர் பண்டிதர் இரத்தினம் அவர்களும், மருத்துவப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களும், முதல்நாள் சொலலியது போல் இன்று இந்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு ஒரு சோதனைக்காலம். உண்மைதான். இந்தக்கஷ்டகாலம் ஏன் வந்தது என்ற கேள்வி எழுகிறது.

#### இன்று பிரச்சினைகளில் வாழ்வு இருக்கிறது

தமிழர்களின் இன்றைய வாழ்க்கையில் வயிற்றுப் பசிதான் இருக்கிறது. ஏமாற்றங்கள்தான் இருக்கின்றன. வேதனைகள்தான் இருக்கின்றன. சிக்கல்விழுந்த நூற்கழுவில் முதல் எங்கே முடிவு எங்கே என்று தெரியாத மாதிரி இன்றையப் பிரச்சினைகள் எதிலிருந்து தோன்றின, எதனுல் தீர்க்க முடியும். என ஒன்றுமே விளங்கவில்லை. ஒரு காலத்தில் வாழ்க்கையில்பிரச்சினைகள் இருந்தன. இப்போது பிரச்சினைகளில் வாழ்வு இருக்கின்றது. ஒருகாலத்தில் வாழ்க்கையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அவநம்பிக்கைகளும் சந்தேகங்களும் இருந்தன. இன்றோ அவநம்பிக்கைகளுக்கும் சந்தேகங்களுக்கும் நடுவில்தான் வாழ்க்கையே இருக்கிறது.

“தனி ஒருவனுக்கு உண்வு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்” என்று கவிபாடலாம். ஆனல் வாழ்க்கையில் அந்தவிதி இன்னும் வளரவில்லை. நஞ்சு குடித்து மனிதர்கள் புழுப்பூச்சி போல் அழிந்து போய்க் கொண்டிருக்கிருர்கள்.

#### திருமணமாகாத பெண்கள்

வேலை கிடைக்காத வாலிபர்களும் திருமணமாகாத பெண்களும் இன்று இந்த ஈழநாட்டின் மிகப்பெரிய பிரச்சினைகள். பெரும்பாலான தற்கொலைகளுக்கும் ஏனைய கிரிமினல் குற்றங்களுக்கும் இந்த இருபிரச்சினைகளே காரணம் வாழ்வதற்கு மருந்து தெரியவில்லை. அதுகிடைக்கிறவரை சாவதற்கு மருந்து தேடிக் கொண்டுதான் இருக்கிருர்கள். ஆகையினுல் இந்தப்பிரச்சினைகள் தீருவதற்கு வழி என்ன என்பதைப்பற்றி ஆராய வேண்டும். வள்ளுவர் காட்டிய வழியை நாம் பின்பற்றுவோமாகில் எல்லாப் பிரச்சினைகளும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும். வள்ளுவர் காட்டிய வழி சிலவற்றைக் குறிப்பிடலாம்.

ஒழுக்கம், நாணயம், பண்பு, ஆகிய பொது வாழ்க்கையின் நியாயங்கள் பறிபோகாமல் காக்கும். ஒரே வேலி இறை அன்புதான. மனம் வளர்வதற்கு மருந்தும் அதுதான்.

#### தமிழ்ப்பண்பாட்டை மறந்துவிடுவோம்

பழைய தமிழ்ப் பண்பாடுகளை நாம் மறந்துவிட்டோம். அவைகளை நாம் மறுபடியும் வளர்க்க வேண்டும். விழுதுகளைப்போல் ஊன்றிக்கொண்டிருக்கும் பழைமையான பழக்கங்கள் ஆலமரம் போன்ற தமிழர்கள் வாழும் நாடுகளில் படர்ந்த வாழ்க்கையைத் தாங்கிக்கொண்டிருக்கிறது.

அறிவு உள்ளவர்கள் அறிவு இல்லாதவர்களுக்கு தம் அறிவைக் கொடுக்க வேண்டும். பணமுள்ளவர்கள் பணமில்லாதவர்களுக்கு தம்மால் இயன்ற உதவி செய்ய வேண்டும். அவசியமில்லாமல் பிறர் உதவியைப் பெறத் துணியாத தன்மானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். வலது கைகொடுப்பதற்கு உயர வேண்டும். வாங்குவதற்காக கீழ்நோக்கித் தாழக்கூடாது.

#### வாழ்வில் வரையறை வேண்டும்

கீழான எதையும் பார்க்கத் துணியாத கண்கள் வேண்டும். கீழான எவற்றையும் தேடத் துணியாத கைகள் வேண்டும். கீழான எவற்றையும் நினைக்க விரும்பாத நெஞ்சம் வேண்டும். நினைப்பிலும், நோக்கிலும் பேச்சிலும், செயலிலும் ஒழுங்கான வரையறைகள் வைத்துக் கொண்டு வாழவேண்டும்.

#### தமிழ்ப் பெண்கள்

அறிவுப் புயலாய் வீசிமறைந்த ஔவையார் போல் சமயமும் வளர்த்து ஞானச் செல்வியராய்ச் சுற்றித் திரிந்து புகழ்சுமந்த குண்டலகேசியை போல்;மணிமேகலையைப்போல் கற்புக்கனல் எழுப்பிப் புகழ் சோதியாய் நிலைத்த கண்ணகியைப்போல்; நலரயாத குழலும், திரையாத முகமும்குறையாத நிறையும் கொண்டு வலையாத சித்திரமாய் அழகுடன் கன்னியாகவே வாழ்ந்து நிறைவுகண்ட திலகவதியைப் போல்; கணவனே வணங்கும் பெண் தெய்வமாய் உயர்ந்த காரைக்கால் அம்மையார் போல் தமது வாழ்க்கையையும் நடத்த ஆசைப்படும் தமிழ்ப்பெண்கள் வேண்டும்.

மேற் சொல்லிய மூன்று இலட்சியங்களும் நாம் பெறுவோமாகில் தமிழர்களுக்கு ஒரு குறையும் வராது. ஆனல் நாம் வள்ளுவர் காட்டிய வழியை நன்றென்று உணரவில்லை. அவர் கூறியவற்றில் ஒன்றையாவது நாம் உறுதியாகக் கொள்ளவில்லை. அதன் காரணத்தாலேதான் நாம் அவசியமில்லாத பூசல்களிற் சிக்கியிருக்கின்றோம்.

#### அளப்பெருந்தொண்டு

திருமறை மகாநாடுகளும் சமயமகாநாடுகளும், முத்தமிழ் மகாநாடுகளும் நான் மேற் சொல்லிய 3 வழிகளையும் தெளிவாகக் காட்டுவதற்கு ஏதுவாயிருக்கின்றன. ஆகையினுல் இத்தகைய மகாநாடுகளை வைக்கிறதற்கு அரும்பாடுபடும் தொண்டர்களுக்கு தமிழ்சமுதாயத்தினர் என்றென்றும் கடமைப்பட்டவர்களாயிருக்கிருர்கள்.

---

## ஜயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கலாமெறுண்ம், இங்கு மக்களுக்கு திருவள்ளுவர்பாலுள்ள டக்தியைக் காணத் தமக்கு பெருமகிழ்ச்சியாக உள்ளதென்றும் கூறினர்.

இம் மாநாடு, “மந்திரமாவது நீறு” என்ற தேவாரத்துடனே தொடங்கியது குறிப்பிடத்தக்கது. இதை இவ்வளவு சிறப்பாக, வெகுகாலம் மறக்கமுடியாதபடி உற்சாகத்துடன் நடத்திவைத்த வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தாரைப் பாராட்டவேண்டும். வேலணையிலே இம்மாநாட்டை நடத்தியது எல்லாவிதங்களிலும் பொருத்தமென்பதை உணரமுடிந்தது.

* * *

தோடுடைய செவியன் விடை
யேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி
பூசியென் உள்ளம் கவர்
கள்வன்
ஏடுடைய மலரால் முனைநாள்
பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே.

— திருஞானசம்பந்தர்.

## ஆளுடையபிள்ளையார்.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிப் பாண்டிமாதேவி அனுப்பிய செய்தி கேட்டுப் பெருமான் புறப்பட அப்பர் தடுத்தார். அப்போது “வேயுறுதோளி பங்கன்” என்னும் கோளறுபதிகத்தைப் பிள்ளையார் பாடிச்சிவபிரான் திருவருள் துணையாக மதுரைக்குச் சென்று கூன் பாண்டியனுக்கு நேர்ந்த வெப்பு நோயை “மந்திரமாவது நீறு” என்ற பாசுரம் பாடித்திருநீறு கொண்டு தீர்த்து, அவனை நின்ற சீர்நெடுமாறனுக்கிச் சமணரோடு செய்த அனல் வாதம், புனல்வாதம் என்பவற்றில் வெற்றிகொள்ளச் சமண மறைந்தது; சைவம் பரவியது.

#### எலும்பு பெண்ணுரு வாக்கியமை

திருமயிலாப்பூரில் இருந்த சிவநேசச் செட்டியார் தமது ஒரே மகளாகிய பூம்பாவை என்பவளையும் தனது செல்வமனைத்தையும் ஞானசம்பந்தப் பெருமானுக்கு மனத்தால் அர்ப்பணித்து அவரதுவரவை எதிர் பார்த்திருந்தார். அது அங்ஙனமாக ஒருநாள் பூம்பாவை மலர் கொய்யும்போது அரவந்தீண்டி இறந்தாள். செட்டியார் மிக வருந்தி ஈமக்கடன் முடித்து அவளது எலும்பு சாம்பர் என்பவற்றை ஒரு குடத்துள் அடைத்துப்பேணி வந்தார். திருமயிலைக்குப் பெருமான் எழுந்தருளியமையறிந்து செட்டியார் வந்து தாம் சேமித்த எலும்புக்குடத்தைப் பிள்ளையார் முன்வைத்து வணங்கி நடந்தவை கூறினர். திருஞான சம்பந்தர் திருவருளை நினைந்து “மட்டிட்ட புன்னை” என்னும் பதிகம் பாடியதும் அக்குடம் உடையப் பூம்பாவை உயிர்பெற்று எழுந்தாள். இவ்வற்புதம் கண்டோர் எவரும் அதிசயித்தனர். செட்டியார் வணங்கி அப்பெண்ணை ஏற்றருளும்படி வேண்டப்பெருமான், அப்பெண் தமக்கும் மகளெனக் கூறி ஏற்கமறுத்தார். அவள் கன்னியாகவே வாழ்ந்து சிவபதம் அடைந்தாள். திருஞானசம்பந்தப் பெருமான் செய்த அற்புதச் செயல்கள் இன்னும் பலவுள. விரிக்கிற் பெருகும்.

#### பெறுமணப் பேறு

இறுதியாகப் பெருமான் தமது பதினரும் வயதில் தந்தையார் சிவபாதவிருதயரது வேண்டுகோளுக்கிணங்க, திருநல்லூர்ப் பெருமணம் எனனும் ஊரில் நம்பாண்டார் நம்பி என்பவரது கன்னிகையை முறைப்படி திருமணஞ் செய்து அக்கினியை வலம் வந்து யாவருடனும் சிவசந்நிதியை அடைந்து “கல்லூர்ப் பெருமணம்” என்றபதிகம் பாடினர். இறைவன் திருவருளால் உடனே ஒரு பெரிய சோதி தோன்றி அதனுள் ஒருவழியும் அமைந்தது. திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் தாம் ஏற்ற கன்னிகையையும் கைப்பிடித்தபடி “காதலாகிக்கசிந்து” என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு, தம்மோடுவந்தயாவருடனும் இறைவன் காட்டிய திருச்சோதியுள் புகுந்து கலந்தார்.

அப்பெருமானது வரலாற்றை நாமெல்லாம் நினைவிற் கொண்டு திருப்பாசுரங்களை ஓதி எம்பிறவிப் பயனை அடைவோமாக.

“காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை
நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினும்
மெய்ப்பொருளாவது
நாத நாம
நமச்சி வாயவே”

## யாழ்ப்பாண மாநகர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நான் விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை.

யாழ்ப்பாண மாநகரசபையின் தற்போதைய நிர்வாகம் திறமையற்றது என்றே எனது அபிப்பிராயம். யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைத்து விசேஷ கமிஷனரை ஏற்படுத்துவதனுல் யாழ்ப்பாணத்திற்கு எவ்வித இழிவும் வந்துவிடாது. கொழும்பு மாநகரசபை கலைக்கப்பட்டு 3 வருடங்களுக்கு விசேஷ கமிஷனர் நிர்வாகத்தில் இருந்திருக்கிறது. சபையைக் கலைக்க வேண்டுமென்ற முயற்சி அரசியல் நோக்கத்தைக் கொண்டதாக இருக்கலாம். ஆனல் இது பற்றி அக்கறையில்லை. நகரின் முன்னேற்றம் பற்றியே கருத்துச் செலுத்த வேண்டும்.

சபையைக் கலைப்பதற்கு எதிர்ப்பு இருப்பதாகவும் அதுவும் இதே வகையில் அரசியல் நோக்கம் கொண்டதாகவும் இதற்கு சமஷ்டிக் கட்சி உடைந்தையாக இருப்பதாகவும் எனக்குத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரை ஆட்சிக் குளறுபடியிலிருந்து காப்பாற்ற வேண்டுமானுல் மாநகரசபையைக் கலைத்து சி. சி. எஸ். உத்தியோகத்தர் ஒருவரை விசேஷகமிஷனராக நியமிக்க வெண்டும்.

மாஜி மேயரும் பிரபல வழக்கறிஞருமான திரு. சாம். ஏ. சபாபதி மாநகரசபையைக் கலைக்கவேண்டியதில்லை என்று தெரிவித்துள்ளார். அவர் பின்வருமாறு கூறினர்:-

யாழ்ப்பாண மாநகரசபையும் அதற்கு முன்னர் நகரசபை, நகரமாவட்டசபை ஆகியவையும் ஆரம்பகாலந்தொடக்கம் திறமைக்குப் பெயர் பெற்று விளங்கியவை. சபையின் வேலைகள் படாடோபமாக இல்லாதபோதிலும் கிடைத்ததைக் கொண்டு வரியிறுப்பாளர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. வரியிறுப்பாளரின் பணத்தில் கைவைக்காமல் அரசாங்கத்திடம் உதவி பெற்றோ பொது மக்களிடம் நிதி வசூலித்தோ மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

#### திடீர் மாற்றங்கள்

சமீபத்தில் சபையின் உயர் பதவிகளில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டனவென்பதில் ஐயமில்லை. இந்த மாற்றங்கள் சபையின் நிர்வாகத் திறமையை பாதிக்கவில்லை.

சபையின் நாளாந்த நிர்வாக அலுவல்கள் சபையின் நிரந்தர உத்தியோகத்தரினதும் ஊழியர்களினதும் கைகளிலுள்ளது. விசுவாசமும் திறமையும் உள்ள ஊழியர்களை மாநகரசபை அப்பொழுதும் கொண்டிருப்பது அதன் அதிர்ஷ்டம்.

சோலைவரிப்பாக்கி பெருமளவில் இருப்பதாக நான் அறிகிறேன். இது சபையின் தவறல்ல. வரி அறவிடும் முறை சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் தலையீடு தான் இதற்குக் காரணம்.

#### அரசியல் பிரசாரம்

மாநகரசபையில் வேலைகள் ஸ்தம்பித்துள்ளதாக சமீபத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் வேண்டுமென்றே செய்யப்பட்ட அரசியல் பிரசாரம்.

சபையின் தற்போதைய நிர்வாகத்தைவிட எந்த விசேஷ கமிஷனரும் திறமையாக நிர்வகித்துவிட முடியாது.

# 'தன்மானத்தைக் காப்பவன் இனத்தையும் காப்பான்'

## திருக்குறள் மகாநாட்டில் திரு. வி. ஏ. கந்தையா பேச்சு

வேலணை, ஞாயிறு

"எந்த ஒரு மனிதனும் தன் மானத்தைக் காக்காவிட்டால் அவன் 'மனிதன்' என்ற நிலையில் இருந்து கீழே இறங்கி விடுகிறான். தமிழர்கள் என்றும் தன்மானத்தைக் காப்பார்கள். எத்தகைய இடர்வந்தாலும் இனத்தையும் மொழியையும் காக்க தமிழினம் என்றும் தயங்காது; தயங்கக்கூடாது. தன்னையும் காத்து தன்னினம், தன்சுற்றம் எனபவற்றையும் காக்கின்ற கடமையுணர்ச்சியுள்ளவனிடம்தான் மான உணர்ச்சியுமிருக்கும். தன் மானத்தைக் காப்பவன்தான் தன்னினத்தின் மானத்தையுங் காப்பான். நேர்மை, வீரம், மானம், ஒழுக்கம் உடையவர்கள்தான் 'சான்றோர்கள்' என்று சொல்லத்தக்கவர்கள். சான்றோன் என்று தன்மகன் புகழப்பட்டபோது அவனை ஈன்றபோதிலும் பெரிதுவக்கின்றாள் தாய். ஈழநாட்டுத்தமிழ் தாய்மார்கள் தங்கள் புதல்வர்களை மானமும் வீரமும் மிக்கவர்களாக விளங்கச் செய்ய வேண்டும். தமிழ்மொழியைக் காப்பாற்றும் பெரும்பணி தாய்மார்களிடம் உண்டு. ஈழத் தமிழ்த் தாய்க்குலம் என்றும் தன்மொழியின் மானத்தைக் காப்பாற்ற உறுதி கொள்ள வேண்டும்."

இவ்வாறு வேலணை தொல்காப்பியர் அரங்கில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மகாநாட்டின் இரண்டாம்நாள் பிற்பகல் நிகழ்ச்சிக்குத்தலைமை வகித்துப் பேசிய தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. வே. அ. கந்தையா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கொள்கையில் ஊறிய தமிழினத்தில் இன்று தீண்டாமை என்ற அரக்கன் தலைவிரித்து இனத்துக்கே அழிவு தேடுகிறது. 'தீண்டத்தகாதவர்கள்' அவர்கள்; கோயிலுக்குச் செல்லக் கூடாது என்றெல்லாம் மனித நீதியை மறந்து பேசுவது எவ்வளவு அநீதியானது-வெட்கக் கேடானது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். எல்லா மக்களும் செல்லக் கூடியதாக ஆலயங்கள் அனைத்தும் திறந்துவிடப் படவேண்டும். பிறப்பாலே மனிதருக்குள் பேதமை கற்பிக்கக்கூடாது. 'ஒன்றே குலம்' என்ற உயர்ந்த கொள்கையை தமிழர்கள் என்றும் மறக்கக் கூடாது. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள சமூகசீர்கேடுகள் மறைய வேண்டும். வரதட்சணைக் கொடுமை மிகச் சொல்ல முடியாதது. பணமில்லாத காரணத்தால் எத்தனையோ தமிழ்க் கன்னியர் வாழ்வு மணம் வீசாது வாடி விடுகிறது. இத்தகைய நிலைகள் எல்லாம் மாறவேண்டும். தமிழ்மக்கள் விஞ்ஞானக்கல்வியில் அதிக நாட்டம் செலுத்த வேண்டும். பொருளாதார விருத்திக்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்."

"குறள்வழி வாழ்வு" என்னும் தலைப்பில் கொழும்பு தமிழ்ச்சங்க செயலாளா திரு க. கந்தையா பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

### உலகத்துக்கே தேசிய இலக்கியம்

"இன்று தேசிய மொழி, தேசிய இலக்கியம், தேசிய மதம் என்ற குரல்களை எல்லாம் கேட்கிறோம். இதற்கும் மேலாக இன்னும் சில ஆண்டுகளின் பின் உலகத்திற்கே ஒரு தேசிய நூலாக திருக்குறள் விளங்கும் என்பது உண்மை. வள்ளுவன் நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. வள்ளுவன் தமிழினத்துக்கென மட்டும் கருதி திருக்குறளைப் படைக்கவில்லை. உலக மக்களுக்காகவே செய்தான். அதில் கூறப்படும் அத்தனை செய்திகளும் உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானவை. வள்ளுவர்வழி நின்று வாழ்க்கை நடத்தும் ஒருவன் மனிதன் என்ற நிலையில் இருந்தும் மேலான நிலையை அடையக் கூடியதாக உள்ளது.

தனக்குத் துன்பம் செய்தவனுக்கே நன்மை செய்ய வேண்டும். அதுதான் அவனைத் தண்டிப்பதற்கு வழி என்ற உயர்ந்த கருத்தை வள்ளுவம் நமக்குப் போதிக்கின்றது. வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்றவன் வள்ளுவன். அவைகளை அரியகுறள்களாக்கி நமக்கு அறிவுரை புகட்டுகின்றான். பெருமையுடையவன் யார்? சிறுமையுடையவன் யார்? என்பதை வள்ளுவர் கூறுவது ஆழ்ந்துநோக்கத்தக்கது. பெருமையுடையவன், ஒருவனது சிறந்த குணங்களை மட்டும் எடுத்துக் கொள்வான். நல்லவற்றை எடுத்துக் கொண்டு அல்லவற்றை விட்டு விடுவான். சிறுமையுடையவனோ ஒருவனது குறைகளை மட்டும் எடுத்துக் கொண்டு நிறைவுகளை விட்டுவிடுவான். 'செயல்' என்ற உரைகல்லைக் கொண்டுதான் பெருமையையும் சிறுமையையும் காணலாம். பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பு வள்ளுவனால் பாராட்டிக் கூறப்படுவது. செல்வத்தைப் புதைத்து வைக்காது. அதனை அறவழியல் செலவிட வேண்டுமென வள்ளுவன் வழிகாட்டுகிறான். இதனை சிந்தாமணி ஆசிரியரும் தம் நூலில் நல்ல முறையில் எடுத்துக் கையாண்டிருக்கிறார்.

சினமே கூடாது என்றவன் வள்ளுவன். ஆனால் அவனே ஒரு இடத்தில் சினம் கொள்ளுவதைக் காணுகின்றோம். இரந்து ஒருவன் உயிர்வாழ வேண்டிய நிலைஏற்பட்டால் அவனைப் படைத்த இறைவனே அழிந்து போகக்கடவன் என்று வள்ளுவர் சினங்கொண்டு சபிக்கிறார். நல்லவர் எல்லாம்தீமையை, அநீதியைக் கண்டு பொங்கியெழத்தான் செய்வார்கள். பாரதிகூட தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இவ்வுலகினை அழித்திடுவோம் என்றார். இல்லறத்தில் வாழ்பவனாக இருந்தாலும்சரி, துறவறத்தில் வாழ்பவனாக இருந்தாலும்சரி அவைகளுக்குரிய ஒழுக்கங்களுக்கேற்ப வாழ வேண்டுமென வள்ளுவன் வழிவகுத்தான்."

### வள்ளுவர் வளர்த்த பெண்

டில்லி திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் "வள்ளுவர் வளர்த்த பெண்" என்ற பொருள்பற்றிப் பேசும்போது பின்வருமாறு கூறினார்.

"வள்ளுவர் வளர்த்த பெண்' வாழ்க்கையில் எப்படி ஒரு பெண் வாழ வேண்டும் என்பதைப் போதிக்கிறான். வள்ளுவருக்கு முந்திய சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றில் பல பெண்களைக் காணமுடிகிறது.

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே என்று தன் கடமையைச் சொல்லும் தாயை நாங்கள் காண்கிறோம்; என்மகன் நாட்டிற்காகப் பிறந்தவன். அப்புலிக்குட்டி பிறந்த கதை இதோ என்று தன்நாட்டுப் பற்றைக் காட்டும் பெண்ணையும் காண்கின்றோம்; போரிலே தோற்ற என் மகன் முதுகிலே காயம் பட்டானானால் அவனுக்குப் பாலூட்டிய மார்பையே வெட்டியெறிகிறேன் என்று சபதங் கூறிய தாயையும் பார்க்கிறோம் புறநானூற்றிலே.

முன் பின் சமையல் செய்யாது தாயின் அரவணைப்பில் இருந்த மகளொருத்தி திருமணம் செய்துகொண்டதும் தன் கணவருக்குத்தன் கையாலே உணவு சமைத்து அளித்து அவன் அதை உண்டு நன்றாயிருக்கிறதே என்று புகழ அதைக்கேட்டு மகிழும் வாழ்க்கைத் துணைவியை பார்க்கிறோம் குறுந்தொகையில். அவள் தன்கணவருக்குப் பழி வருமென்றால் அதற்காகத் தன் கவலையை மறந்து-துன்பத்தை மறந்து வாழ்கின்ற பெண்ணையும் சங்க இலக்கியங்களிலே காண்கின்றோம்.

இவர்கள் எல்லாருக்கும் மேலாகவும் ஒரு பெண்ணை வள்ளுவர் வளர்க்க வேண்டி வந்தது. சங்ககாலத்தில் பரத்தையர் வீட்டை ஆண்கள் செல்வதைக் குற்றமாக தலைவியர் கருதவில்லை. ஆனால் வள்ளுவருக்கு இது உடன்பாடு அல்ல. எனவே அதற்கு எதிராக வள்ளுவர் எதிர்க்குரல் எழுப்புகின்றார். தமிழிலக்கியத்தில் பரத்தையருக்கு எதிராக முதற்குரல் எழுப்பியவர் வள்ளுவரே. தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லறம் நல்லறமாக இன்பமுடையதாக இருக்க வேண்டுமானால் பரத்தையர் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று அவர் கருதினார். மேலும் தமிழ்ப் பெண்களில் ஒருபகுதியார் இழிந்த நிலையில் பண்பிழந்து விலைமாதராக வாழ்வதை வள்ளுவர் விரும்பவில்லை. தன்னையும் காத்து, தன் கணவனையும் காத்து, தன் புகழையும் காக்கின்ற பெண் வள்ளுவர் வளர்த்த பெண்".

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

### அரசாங்கம் குறளைப் படிக்கவேண்டும்

பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற மேல்நாட்டறிஞர்கள் கூறிய அரசியல் கருத்துக்களைப் போல் வள்ளுவரது பொருட்பால் விளங்குகின்றது. வள்ளுவன் குறளிலே கூறப்படும் அரசியற் கருத்துக்களின்படி உலகம் அமையுமானால் உலகில் என்றும் சாந்தியும் சமாதானமும் அன்பும் அறமும் பெருகும். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் மிகப் பெரும் செல்வத்தையும் அழிக்கும் பெரும் படையைப் போன்றது என்று கூறும் வள்ளுவரின் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இலங்கை அரசு வள்ளுவன் குறளைக் கட்டாயம் படிக்க வேண்டும். அப்பொழுது தான் இலங்கையில் உண்மையான ஆட்சி நடைபெற முடியும்.

நினைத்ததைச் சாதிக்க வேண்டின் எண்ணியவர் திண்ணியராக இருக்கவேண்டும். முயற்சியின் பெருமையை வள்ளுவர் நன்கு கூறியுள்ளார். ஒருவனுக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அறிவுள்ள ஆசானாகவும் வள்ளுவர் விளங்கினார். தனிமனிதன், மொழி, பெண்கள், எல்லாம் எப்படி வாழவேண்டும்— இருக்கவேண்டும் என்ற சிறந்த கருத்துக்களைத் திருக்குறளில் நாம் காணமுடியும். திருக்குறளைப் போற்றுவதன் மூலமும் தமிழர் சமுதாயம் மறுமலர்ச்சியடைய முடியும்.

வித்துவான் க. சி. நடராசன் 'குறளும் காவியங்களும்' என்ற தலைப்பில் பேசுகையில் "சிந்தாமணி, கம்பராமாயணம், மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற காவியங்களிலும் இன்னும் கலிங்கத்துப் பரணி, மனோன்மணியம், பாரதியார் போன்ற நூல்களில் எல்லாம் வள்ளுவரின் கருத்துக்கள் நல்லமுறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. திருக்குறளுக்கு உரையாசிரியர்கள் உரை எழுதும் முன்னரேயே பல குறள்களின் தெளிவான கருத்துக்களை விரித்து அவற்றுக்கேற்ற பாத்திரங்களையும் சம்பவங்களையும் படைத்து தமது காவியங்களைப் பெருமைப் படுத்தியுள்ளார்கள் என்று கூறினார்.

வித்துவான் க. வேந்தனார் "இலக்கிய உலகில் இளங்கோவும் திருக்குறளும்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

'அறம், பொருள், இன்பம்' என்ற மூன்றையும் கொண்டு பெருமையும் சுவையுங்கொண்ட இரு பெரு நூல்களாக சிலம்பும் குறளும் விளங்குகின்றது. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்றார் பாரதியார். அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் விடுகின்ற தமிழினம் உலகத்துக்கு கொடுக்க கூடியதாவிருந்தது தமிழ் மறையே.

தமிழருடைய வாழ்விற்கு இலக்கணம் வகுத்தவன் தொல்காப்பியன். தொல்காப்பியர் வகுத்த ஐந்திணைக்கு இயைய அறம் பொருள் இன்பம் மூன்றையும் கலந்த நூலை திருவள்ளுவர் தந்தார். அன்பும் அறனும் இல்லாத வாழ்வு செழிக்காது.

8ம் பக்கம் பார்க்க



# ‘தமிழினம் இங்கு நிலைத்து வாழ வழிகாணவேண்டும்’

## இளைஞர் கழகவிழாவில் உடுப்பிட்டி எம். பி. பேச்சு

பருத்தித்துறை, திங்கள்

“கலையையோ காட்சியையோ வளர்ப்பதைவிட்டு தமிழ் இனம் இந்த நாட்டில் நிலைத்து வாழ்வதற்கான வழிகளைக் காண சனசமூக கிராம முன்னேற்ற இயக்கங்கள் உழைக்க வேண்டும்.”

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் புலோலி தமிழ் இளைஞர் கழக 18-வது ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும் பேசும்போது கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கைச் சரித்திரம் கண்டிராத நெருக்கடி இன்று தமிழ் பேசும் மக்களை நோக்கி அலை அலையாகப் பெருகி வருகிறது. இதைத் தடுக்காவிடில் எம் இனம் அழிந்துவுடும் என அஞ்சவேண்டியுள்ளது. இதைத் தடுக்க உள்ள ஒரே ஒரு வழி இன்றைய நிலையில் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுசேர வேண்டியதேஆகும்கட்சி,ஜாதி, மத பேதங்கள் எம்மிடையே முற்ருக ஒழிய வேண்டும். எம் இனத்தின் விடுதலையே இவையனைத்திலும் மேலானது.

நாம் சிங்களம் படிக்க வேண்டும் என சில தீய சாதிகள் எம்மில் சிலரைத் தூண்டி விடுகின்றன. சில இடங்களில் வகுப்புகளே நடைபெறுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களாவது தொடர்ந்தும்தமிழ்ப்பிரதேசமாக இருக்க சிங்களம் படிப்பவர்கள் உடனடியாக அதைக் கைவிட வேண்டியது அவசியமாகும். புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு போன்ற இடங்கள் தமிழ் பேசும் மக்கள் வாழ் பிரதேசமாக இருந்து இன்று அவை மாற்றம் அடைந்துள்ள நிலையை சரித்திரம் நமக்குத் தெளிவாக்குகின்றது. சிங்களம் படித்தாலும் உத்தியோகம் நமக்குக் கிடைக்காது. அரசாங்கம் தமிழர்களது பொருளாதார பலத்தைக் குறைத்து தாமே எம்மை ஆள நினைக்கும் போது அரசாங்க உத்தியோகம் நமக்குத் தருவார்கள் என நாம் எப்படி கருதவோ, நம்பவோ முடியும்?”

பேராசிரியர் வை. கா. சிவப்பிரகாசம், வித்துவான் க. கி. குமாரசாமி முதலியோரும் பேசிய பின் செல்வி ஞானதேவி தியாகராசாவின் இன்னிசைவிருந்து நடைபெற்றது.

---

### “சுகதுக்கங்களில் பங்குபெற வேண்டும்”

#### உபராஷ்டிரபதி யோசனை

புதுடில்லி, மே 21

மக்கள் ஒருவரின் சுகதுக்கங்களில் மற்றவர் பங்கெடுப்பதன் மூலமே தேசிய ஒற்றுமை ஏற்படமுடியுமென்றும் ஒற்றுமையை வளக்கமுடியுமென்றும் இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் ஸாக்கிர் ஹுசெய்ன் நேற்று புதுடில்லியில் நடைபெற்ற ஈத் பண்டிகையையொட்டிய ஒரு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தேசிய ஒருமைப் பாட்டுக் கமிட்டியால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த வைபவத்தில் டாக்டர் ஸாக்கிர் ஹுசென் மேலும் பேசுகையில் பண்டிகைகளும் திருவிழாக்களும் தேசிய ஒற்றுமையை வளர்க்க வழிசெய்யுமென்ருர்.

இந்த வைபவத்துக்கு பாசன நீர்ப்பாசனம் மந்திரி ஜனுப் ஹாபீஸ்முகமது இப்ராகிம் தலைமை வகித்தார்.

---

### முஸ்லிம் எழுத்தாளர் சந்திப்பு

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பின் தென்பகுதியைச் சேர்ந்த காத்தாங்குடியில் சனிக்கிழமை மாலை முஸ்லிம் எழுத்வாளர் சந்திப்பு நடைபெற்றது.

வித்தியாதரிசி ஜனுப் அ.மு. சரிபுதீன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிழக்கிலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் மட்டுமல்லாது, இலங்கையில் பிரசித்தி பெற்ற முஸ்லிம் எழுத்தாளர்களான ஜனுப் முகம்மது சமீம், ஜனுப் அப்துல் ஸமது, எம். ஐ. எல். பக்கீர்தம்பி, ஆகிய பலர் கலந்து, முஸ்லிம் எழுத்தாளர்களின் பலபிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தனர்.

---

### வானொலி நிகழ்ச்சிகள்

#### கொழும்பு

செவ்வாய் 22-5-62

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸலாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரைஇசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 குரல்இசை, 8-00முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15இசைச்சித்திரம், 9-45 எம். பி. பாலகிருஷ்ணன் நாகஸ்வரம்.

#### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை,7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எம். கே. கமலகுமாரி பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 எம்.கே. கமலகுமாரி பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம், 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-45 டி. ஆர்.நவநீதம் புல்லாங்குழல்,9-15“ஆகிவராத நெக்லெஸ்”-நாடகம், 9-30மெல்லிசை, 9-50கலைச்சொல்கேளீர், 10-00 திருக்குறள்விழா ரேடியோவர்ணனை.

---

### சிங்களப் பெண்களும் தீக்குளித்தனர்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு தாண்டவன் வெளிப் பகுதியில் உள்ள கட்டு கண்ணகை அம்மன் வருடாந்த உற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சியான தீப்பாயும் வைபவம் வெள்ளிக் கிழமை அதிகாலை பக்திப்பரவசமான சூழ்நிலையில் நடைபெற்றது.

“அரோஹரா” கோஷத்தின் மத்தியில் தெய்வமாடியவர்கள் உட்பட 27 பக்தகர்கள் தீப்பாய்ந்தனர். இரு சிங்களப் பெண்களும், ஓர் சிங்கள் அன்பரும் தீகுளிப்பில் கலந்து கொண்டனர்.

---

### கண்ணகை அம்மன் சடங்குகள் முடிவுற்றன

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட கண்ணகை அம்மன் சடங்குகள் கடந்த பத்துத்தினங்களாக நடைபெற்று, 19-ம் திகதி நடைபெற்ற ‘குளிர்த்தி’ வைபவதுடன் முடிவடைந்தது. கண்ணகை அம்மன் சடங்கின் இறுதி நிகழ்ச்சியான ‘குளிர்தி’ வைபவத்தில், ஒவ்வொரு ஆலயத்திலும் ஆண்களிலும் பார்க்க திரளான பெண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

### வேலாயுதசுவாமி திருவிழா முடிந்தது

மட்டக்களப்பு, திங்கள்

ஸ்ரீ சித்திவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் சனிக்கிழமை காலைநடைபெற்ற தீர்த்தோற்சவத்துடன் முடிவுற்றது.

சனிக்கிழமை அதிகாலை திருவிழா முடிவடைந்ததும் ஆலய முன்றலில் தீ வளர்க்கப்பட்டு, பக்தர்கள் அரோகரா கோஷமிட முப்பது பக்தர்கள் செந்தணலின்மேலே நடந்து சென்றனர்.

---




கெட்டியான உணவு அருந்துவதற்கு உங்கள் குழந்தையை சிறந்தமுறையில் பழக்கிவிட்டீர்களா?

அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில்வைத்திருக்க வேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவை சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

★ உணவை மாற்றும் பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்ருகச் செரிக்கக்கூடிய கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்கவேண்டும்.



மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ள வேண்டிய காலம். 50வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் ரஸ்குகள்தான் பாலுடன் சேர்த்து ஊட்டக்கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.






பார்லீஸ் தானியப்பொருள்கள், கனிப் பொருள்கள் விட்டமின்சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்துவிடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.

FARLEY'S

பார்லீஸ்

குழந்தைகளின் முதல்கெட்டியான உணவு

# 'தீயகுணங்கள் விஷத்தை விட கொடியன"

## திவ்யஜீவன சங்க விழாவில் சுப்பிரமணியானந்தா பேச்சு

நாவலப்பிட்டி, ஞாயிறு

"கிருமிநாசினியைக் குடித்தால் ஒரேமுறையில்தான் துன்பம் ஏற்படுகிறது. நமது உள்ளத்தில் இருக்கும் விரோதிகளான பொறாமை, வஞ்சகம் முதலான தீய குணங்கள் பொலிடோலைவிடக் கொடியன. இவற்றால் இரத்த நரம்புகள் எப்பொழுதும் நஞ்சுத்தன்மை அடைகின்றன."

இவ்வாறு சுவாமி ஸ்ரீ சுப்பிரமணியானந்தா கண்டியிலுள்ள சச்சிதானந்த தபோவனத்தில் வியாழக்கிழமை மாலையில் அந்தர்யோகத்தைத் தொடக்கி வைத்து தலைமையுரை நிகழ்த்துகையில் கூறினர். இலங்கையில் பல்வேறு கிளைச் சங்கங்களிலிருந்தும் பெருந்தொகையானோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ சுவாமி சுப்பிரமணியானந்தா மேலும் கூறியதாவது:-

நாம் செய்யும் கருமங்களை ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்யவேண்டும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழவேண்டும். தினமும் உலக ஆசாபாசங்களில் பழகிவந்த நாம் வருடத்தில் இத்தகைய சில தினங்களிலேனும் இறைவன்பால் மனதைப் பூரணமாகச் செலுத்தி ஆத்மீக வாழ்வுபெற மனதைப் பழக்கவேண்டும். மனம் போன போக்கில் வாழக் கூடாது. மனதை ஒருமுகப்படுத்தி கடவுள் பக்கம் திருப்புவதற்கு சத் சங்கம், பிரார்த்தனை முதலான நற்பழக்கங்களைத் தினமும் அனுஷ்டிக்க வேண்டும்."

இவ்விழாவில் ஸ்ரீ வை. தியாகராஜ சுவாமிகள் திருப்புகழ் பஜனை நடத்தினர். திரு. வே. த. மயில்வாகன ஆழ்வார் 'பாகவதன் பெருமா[illegible]'பற்றி கதாப் பிரசங்கம் செய்தார்.

யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் இரண்டாம் நாள் நடைபெற்ற அந்தர்யோக விழாவில் தலைமைவகித்துப் பேசுகையில் கூறியதாவது:-

சிவானந்த மகரிஷி தாம் பெற்ற அனுபவங்களை உலக மக்களுக்கு வழங்க 1936-ம் ஆண்டு திவ்ய ஜீவன சங்கம் இமயமலைச்சாரலில் ஸ்தாபிக்கப்பட்டது. அது முதல் அகில உலகிலும் கிளைச் சங்கங்கள் தோன்றி பெரும் தொண்டாற்றிவருகின்றன. திவ்ய ஜீவனசங்கத்தின் பரந்த நோக்கம் பல்வேறு மதத்தவர், இனத்தவர்களையும் ஒன்றுபடுத்தி அகில உலக மக்களையும் ஒரே குடும்பமாக வாழச் செய்துவருகிறது.

குருநாதர் பொன் மொழிகளில் எதுவும் குறைவுபட்டது என்று ஒதுக்கிவைக்கவில்லை. எப்படிப்பட்ட கொள்கையுடையவர்களையும் திவ்ய ஜீவன சங்கம் ஏற்றுக்கொண்டு அவர்களை தனக்கு உகந்ததாக மாற்றிக்கொள்கிறது. ஸ்ரீசிவானந்த மகரிஷியின் ஆத்மீக சக்திதான் இதற்குக் காரணம்.

எந்தவிதமான தண்ணீரையும் பெரிய சமுத்திரம் ஏற்றுக்கொள்ளும்தன்மையுள்ளது. அத்துடன் தன்னுடைய நிலையில் குறையாமல் அவற்றை புனிதப்படுத்தும் தன்மையும் உடையது. ஆத்ம ஞானிகளும் அகண்ட சமுத்திரத்தைப் போன்றவர்கள். இத்தகைய நிறை ஞானியின் காலத்தில் வாழ நாம் பெருமைப்பட வேண்டும். நம்மை நாம் சத்குருவிற்கு அர்ப்பணிக்க வேண்டும். இது ஒன்றைச் செய்தால் இதர நன்மைகள் எல்லாம் தாமாக வரும்."

அந்தர்யோகத்தில் கலந்து கொண்டவர்களுக்கு யோகிராஜ் சச்சிதானந்தா ஆசனம், பிராணயாமம், தியானம் முதலான பயிற்சிகள் அளித்தார். வெள்ளிவிழா மலர் வெளியீடும் நடைபெற்றது. யோகாசனப் போட்டி, பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றன.

## தன்மானத்தை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்புடைய பெண்ணை தெய்வமாகக்கொண்ட முதற்குரல் இளங்கோவடிகளுடையது. வள்ளுவர் குறளுக்கு ஏற்ற பொருத்தமான பாத்திரமாக இளங்கோவடிகள் கண்ணகியைப் படைத்துள்ளார். அரசன் அறநீதி பிழைத்தபோது அறமே அவனுக்கு கூற்றுவனாக அமையும் என்பதை இளங்கோவடிகள் கண்ணகிமூலம் நன்கு மெய்ப்பித்திருக்கின்றார்.

திருச்சிப் பேராசிரியர் திரு. ஐயம்பெருமான் கோனர் தமிழ் மறை பற்றிப் பேசியதாவது:-

### மறை என்றால் என்ன?

'மறை என்றால் மறைவான பொருளைத் தருவது அல்லது மறைத்துவைக்கப்பட்ட பொருளை வெளிப்படுத்துவது என்று பொருள். திருவள்ளுவர் காலத்தில் வட நாட்டில் இருந்து வந்த ஆரியர் ஆதிக்கம் அதிகமாய் இருந்தது. அவர்களுடன் கூட வந்த வர்ணாஸ்சிரம் தர்மமும் மோலோங்கி இருந்தது. அவர்களுடைய வேதம் நன்கு செல்வாக்குப் பெற்று இருந்தது. அப்போது தான் வள்ளுவன் தோன்றி 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற பொது நீதியைப் புகட்டினர். திருவள்ளுவர் செய்த அந்நூல் தமிழ் மறை என்று வேதங்களுக்கு இணையாகப் போற்றப் பட்டது.

திருக்குறளை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தது என்று பெருமை கொள்கின்றனர். திருவள்ளுவர் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவர். அவர் இல்லறமே நல்லறம் எனப் போற்றினர். தமிழ் நாட்டில் சமண மதம் அழியக்காரணமாக இருந்தது சமணர்கள் துறவறத்தைப் போற்றியது தான்.'

திரு. சபா. ஆனந்தர் பேசும் போது திருவள்ளுவர் ஒரு சிறந்த சிந்தனைச் சிற்பி, தத்துவமேதை, மெஞ்ஞானி, எல்லாம் வல்ல பல்கலைப் புலவர் எனக் குறிப்பிட்டார்.

செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசிய பின் நடன ஆரியர் நல்லையாவின் மாணவிகளின் நடனக் கச்சேரியும் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் தயாரிப்பான "குறள் தந்த வாழ்வு" என்னும் நாடகமும் நடைபெற்றன.

## அர்ஜன்டீனு

புவனர்ஸ் அயர்ஸ், மே 20

ஆர்ஜன்டீனுவில்அரசியல் கட்சிகளின் நிர்வாகக் கமிட்டிகள் கலைக்கப்பட்டன. பார்லிமெண்ட் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

## முல்லைத்தீவில்...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தை வசப்படுத்தி நல்ல விலையில் தோட்டத்தை விற்பதற்கு அவர்கள் முயல்கிறார்கள் என்பதனை மந்திரி அறிவாரா? இது விஷயமாக அரசியல் வட்டாரங்களிலிருந்து வற்புறுத்தலேதாவது கொண்டுவரப்பட்டுள்ளதா? அவ்வாருயின் யாரால் கொண்டுவரப்பட்டுள்ளது"?

திரு. தசநாயக்கா கல்வி, ஒலிபரப்பு மந்திரியிடம் கேட்கவிருக்கும் கேள்வி:-

"மந்திரி சாகிராக் கல்லூரியின் அதிபராயிருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரு விடுதிகளினதும் நிலையென்ன? இவை பாடசாலைக்குச் சொந்தமானவையா அன்றேல் வேறு யாருக்கும் சொந்தமானத? எத்தனை பேர் இவ்விடுதிகளில் தங்குகிறார்கள்? மாத வரும்படியென்ன?"

இக்கேள்விகள் நாளை சபையில் கேட்கப்படும்.

---

கொழும்பு, ஞாயிறு

ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கைப் பாராளுமன்றத் தூதுகோஷ்டி நேற்று விடுத்த கூட்டறிக்கை ஒன்றில் பூரண ஆயுதப் பரிகரணம் சகல மக்களுக்கும் முக்கியமான பிரச்னை எனக் கூறியுள்ளது.

# ஆத்மீகக் குறிப்பு எழுத வேண்டும்

## யோகிராஜ் சச்சிதானந்தா யோசனை

நாவலப்பிட்டி, ஞாயிறு

முகம் பார்க்க கண்ணடி உதவுவது போல மனத்தின் குறைவு நிறைவு காட்ட ஆத்மீகக் குறிப்பு உதவுகிறது. தினசரி வியாபார முடிவில் வரவு செலவு பார்த்து லாப நஷ்டம் பார்க்கிறார் வியாபாரி 'எழுதி வாழாதான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்' போலாகும். இதுவரை வாழ்க்கையில் தினசரிக் குறிப்பு எழுதாதோர் இனிமேலாவது ஆத்மீகக் குறிப்பு எழுதி வருதல் நன்று.

இவ்வாறு யோகிராஜ் சச்சிதானந்தா கண்டி சச்சிதானந்த தபோனத்தில் நடைபெற்ற வெள்ளி விழாவில் பேசும் போது கூறினர்.

இந்திய ஹைகமிஷன் இரண்டாவது காரியதரிசி திரு. டி. வி. இராமகிருஷ்ணராவ் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கி சுவாமி சிவானந்தமகரிஷியின் வாழ்க்கையையும், திவ்ய ஜீவன சங்கத்தின் அரும்பணிகளையும் எடுத்துக் கூறினர். ஆத்மசோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா விழாவிற்கு வந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினர். செல்வி இராஜேஸ்வரி வரவேற்புப் பாடல் பாடினர்.

இவ் விழாவில் நடைபெற்ற திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா மலர் வெளியீட்டில் முதலாவது மலரை ஏலத்திற்கு விட்டபோது கொழும்பு வாசியான திரு. இராமசாமி இருபத்தைந்து ரூபாய் ஏலத்தில் அதனைப் பெற்றுக் கொண்டார்.

திரு. பொ. சின்னத்துரை பேசுகையில்கூறியதாவது:-

மனிதனிடம் நிறைந்துள்ள தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்த முயல வேண்டும். இதற்கு ஸ்ரீ சிவானந்த மகரிஷியின் உபதேசங்கள் வழிகாட்டுகின்றன. இதை உணர்ந்து கொண்டால் அரசியல் சமுதாய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம். வேற்றுமையில் ஒற்றுமை காணலாம். உலக மக்கள் ஒரே குடும்பமாக வாழலாம்.

இவ்விழாவில் ஸ்ரீமதி பொன்னம்பலம் கிருஷ்ண பிள்ளை, திரு. அ. சுப்பிரமணியம் முதலான வேறு பலரும் பேசினர்.

ஸ்ரீமதி கமலா விவேகானந்தன, திரு. மார்க்கண்டேயர் ஆகியோர் இன்னிசை விருந்தளித்தனர். செல்வி பண்டிதை சி. இராஜலட்சுமி நன்றியுரை கூறினர். ஸ்ரீமதி டி. வி. இராமகிருஷ்ணராவ் யோகாசனம், பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கினர்.

பரிசில் பெற்றோர் விபரம் பின்வருமாறு:-

### யோகாசனப் போட்டி

**மேற்பிரிவு**

கே. எஸ். கந்தையா, ஆர். எஸ். பழனியாண்டி, கே. சாகரன்.

மத்திய பிரிவு: எம். இரத்தினலிங்கம், இ. தியாகராசா, ஏ. வேலையா.

**கீழ்ப்பிரிவு**

கே. பாலபரமேஸ்வரன், கே. துரைராஜ்.

### பேச்சுப் போட்டி (ஆண்கள்)

மேற் பிரிவு: ஆர். ஏ. ஜெகதீசன்.

மத்தியபிரிவு: வி. கிருஷ்ணன்.

கீழ்ப்பிரிவு: என். [illegible]சத்தியமூர்த்தி, வி. லக்ஸ்மணன்.

**பெண்கள்**

மேற்பிரிவு: என். உமாதேவி, டி. இராஜேஸ்வரி.

[illegible]த்திய பிரிவு: ஏ. ஜெகதீஸ்வரி, என். சரோஜினி, என். நித்தியானந்தி கே. கமலாதேவி.

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..................

கல்லூரி ..................

எனது பெயர் ..................

விலாசம் ..................

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

மொடர்ன் (பதுளை) விஜிதா (ம[illegible]கெவிபா) கிரசன்ட் (புத்தளம்)



[illegible]. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்

எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா

பத்மினி பிரியதரிசனி

நடித்த

இரத்தினபுரி இளவரசி

டைரக்ஷன்: ராமண்ணா

5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 திரைகளில்

சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி,

நடித்த

பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)

நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி

நடித்த

அனர்கலி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.